உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 28 ] கீலக - கார்த்திகை - 10—12—68 [ இதழ் 1

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய் ! பிஞ்ஞகா ! பிறப்பிலீ !
கொன்றையம் முடியினாய் ! சூடலால வாயிலாய் !
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## அரும்பெருஞ் சோதி

இறைவனை, 'சோதியே, சுடரே, சூழொளி விளக்கே' என்றும், ஒளிவளர் விளக்கே! என்றும் இவ்வாறு ஒளி வடிவினனாக அருளாளர் பலரும் அருளிச்செய்தலைக் காண்கின்றோம். ஒளி இருளைப் போக்குதல் உலகின்கண் நாம் நன்கு கண்டறிந்தது. அந்த ஒளி வடிவினனாக இறைவன் போற்றப் படுகின்றான் என்றால், அவனும் இருளை அகற்றுபவனாய் இருத்தல் திண்ணம்.

உலகில் உள்ள இருளைப் போக்குதற்குப் பகலவன் முதலிய பொருள்களே போதுமானவை என்பது வெளிப்படை. ஆகவே, இறைவன் போக்குவது உலகில் நாம் நன்கறியும் இருளையன்று;

வேறுஇருளே என்பது தெளிவாகின்றது. அவ்விருள் எது? அதுதான் அகஇருள்: அஃதாவது அறியாமை - அஞ்ஞானம். அஞ்ஞானம், ஞானத்தாலே போக்கப்படுமாதலின், 'அஞ்ஞான மாகிய அகஇருளைப் போக்கும் ஒளியாக இறைவன் உள்ளான்' என்பதற்கு, 'ஞானவடிவாய் இலங்குகின்றான்' என்பதே பொருளாம். ஆகவே, 'சோதியே சுடரே' என்பன முதலாகச் சொல்லப்படும் சொற்களுக்கெல்லாம், ஞானம் அல்லது அறிவு என்பதே பொருளாயிற்று.

இனி, 'ஞானம் அல்லது அறிவு' என நாம் இவ்வுலகில் அறிவனவெல்லாம் அறியாமைக்குப் பின்னர்த் தோன்றுவன வாயும், தோன்றிய பின்பும் அறியாமையால் மறைக்கப்பட்டு மறைவனவாயுமே உள்ளன. அஃதாவது எப்படிப்பட்டவரும் ஒரு பொருளை முன்பு அறியாதிருந்த, பின்பு எவ்வழியினாலோ அறிகின்றார்களேயன்றி, முதலிலேயே அதனை அறிவதில்லை. மற்றும், அறிந்த பொருளையும் பின்னால் மறந்துவிடும் தன்மை அனைவரிடத்துமே காணப்படுகின்றது. ஆகையால் அனைவரது அறிவிற்கும் தோற்றமும், மறைவும் உள்ளன என்பது தெளிவு. 'தோற்றம், மறைவு' என்பவற்றை முறையே, 'முதல், முடிவு' என்று கூறலாம். எனவே, யாவருடைய அறிவும் முதலும், முடிவும் உடைய அறிவே. இறைவனது அறிவு அவ்வாறன்றி என்றும் ஒருபெற்றித்தாய் விளங்குவது. அதனால் முதலும், முடிவும் இல்லாதது இதனால், இறைவன் ஆதியும், அந்தமும் இல்லாத சோதியன்றோ!

இன்னும், ஏனையோருடைய அறிவுகள் எல்லாம் சிலவற்றையே அறியும் அறிவல்லது, எல்லாவற்றையும் முற்ற அறியும் அறிவல்ல. மேலும், அறியும் சிலவற்றையும் ஒருகாலத்தில் ஒன்றை அறிதலல்லது, எல்லாவற்றையும் ஒருங்கே ஒருகாலத் தில் அறிவன அல்ல. அதனால், அனைவரது அறிவும் சிற்றறிவே அன்றி முற்றறிவல்லவாம். இறைவனது அறிவு அவ்வாறன்றி எல்லாவற்றையும் ஒருங்கே அறிந்தாங்கு அறிந்து நிற்கும் முற்றறிவாம். அதனால், உயிர்கள் சிற்றொளியின; இறைவன் பேரொளியினன் - பெருஞ்சோதி.

ஆதி அந்தம் இல்லாத பெருஞ்சோதியை, ஆதியும் அந்தமும் உடைய சிற்றறிவு அறிதல் என்றால், அஃது எளிதான செயலோ?

அன்று. எண்ணிறந்த பிறப்புக்களில் செய்த தவமுதிர்ச்சி காரணமாக, அவன் அருளையே கண்ணாகப் பெற்றுக் காணும் பேறு பெற்றவரே அந்தச் சோதியைக் காணுதல் கூடும். அதனால், இறைவன் அருஞ்சோதியாய் உள்ளான் என்க.

'இறைவன் இத்தகைய பெருமையுடையவன்' என்பதையே மாணிக்கவாசகர், "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் சோதி" என்று விரித்துக் கூறியருளினார். ஆதி, 'அடி' என்றும், அந்தம், 'முடி' என்றும் சொல்லப்படும். அதனால், ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதியாகிய இறைவன் அடி முடி அறியப்படாதவனாய் விளங்குகின்றான்.

"பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே"

என்றும்,

"கீதம் இனிய குயிலே
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதம் இரண்டும் வினவின்
பாதாளம் ஏழினுக் கப்பால்;
சோதி மணிமுடி சொல்லின்
சொல்லிறந்து நின்ற தொன்மை"

என்றும் போந்த திருவாசகப் பகுதிகள், இறைவன் ஆதி யந்தம் இல்லாத சோதி என்னும் உண்மையையே விளக்குவனவாம். மாலும் அயனும் அடிமுடி தேடி அறியாது நின்ற வரலாறு இவ்வுண்மையையே விளக்கிநிற்பது.

அரியும், அயனும் அடிமுடி தேடிய வரலாறு திருமூலர் முதலாகிய தொல்லாசிரியர் காலத்திருந்தே சொல்லப்பட்டு வருவது. நக்கீரதேவரும் ஈங்கோய் எழுபதின் முதற்பாட்டிலே-

"அடியும் முடியும் அரியும் அயனும்
படியும் விசும்பும்பாய்ந் தேறி—நொடியுங்கால்
இன்ன தெனஅறியா ஈங்கோயே ஓங்கார
மன்ன தென நின்றான் மலை"

என்று பாடுகின்றார்.

மால் அறியா, நான்முகனும் காணா மலையாகச் சொல்லப் படுவது அண்ணாமலையே. அது, பிரம விட்டுணுக்களுக்குமுன் தோன்றிய நெருப்புமலையாய், அவர்களால் அடிமுடி யறியப் படாதது என்பது அத்தல புராணத்தில் மட்டுமன்று; கந்த புராணத்திலும் சொல்லப்பட்டது. ஆகவே, அந்த மலையே சிறப்பாக, "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி" எனப்படுகின்றது.

அண்ணாமலைத் தலத்திற்குச் சிறப்பு நாள் கார்த்திகைத் திங்களில் வரும் கார்த்திகையும், சிறந்த விழா, அங்கு அன்று அண்ணாமலையின் உச்சியில் விளங்கும் தீபதரிசனமுமே யாகும்.

இறைவனை மக்கள் சோதி வடிவினனாகக்கண்டு வணங்கும் சிறப்புநாள் மேற்குறித்த திருக்கார்த்திகை நாளே. "கார்த் திகை நாள்... .........விளக்கீடு காணாதே போதியோ பூம் பாவாய்" என்று திருஞானசம்பந்தரும் அருளிச்செய்தார். நாவுக்கரசர்,

" ஊரொளிய திருமேனிச் செங்கண் மாலும்
கடிக்கமலத் திருந்தவனும் காணா வண்ணம்
சீரொளிய தழற்பிழம்பாய் நீண்ட தொல்லைத்
திகழொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்
ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்
ஏழுலகும் கடந்தண்டத் தப்பால் நின்ற பேரொளியை "

என்று அருளிச்செய்த ஒளிக்காட்சியை மக்கள் பெற இறைவன் சிறப்பாக அருள்புரிவது மேற்குறித்த நாளில் அண்ணாமலைத் தலத்தில்தான்.

அத்தகைய காட்சியை நாம் பொதுவாகத் தமிழகத்தின் எல்லா இடங்களிலும், சிறப்பாக அண்ணாமலையிலும் கண்டு களித்ததை என்றும் மறவாது அகத்திட்கொண்டு அகஇருள் போக்கி உய்வோமாக.

# ஞானசம்பந்தத்தின் புத்தாண்டு

தமிழகத்தில் சிறந்த, சமய, இலக்கியத் திங்களிதழாக விளங்கிவருகிறது ஞானசம்பந்தம். 27 ஆண்டுகளில் இவ்விதழ் ஆற்றிய பணிகள் பல. சிறந்த சமய நுண் பொருட்கட்டுரைகளையும் தமிழிலக்கிய இலக்கணக்கட்டுரைகளையும் தாங்கிச் சமயமணமும் தமிழ் மணமும் ஒருங்கே கமழும் இதழாக ஞானசம்பந்தம் வெளிவருவதை அனைவரும் அறிவர். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் அருளுரைகளைத் தமிழுலகம் இவ் விதழ்கள் வாயிலாகத் தொடர்ந்து அறிந்து பயன் எய்தி வருகிறது. வெளிவராத நூல்கள்பல இவ்விதழ் வாயிலாக வெளியிடப்பெற்றுள்ளன. அறிஞர்கள் பலரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல இவ்விதழ்வழி வெளிவந்துள்ளன.

இவ்வாறு பல்வகையாலும் பணிசெய்துவரும் இத் திங்கள் இதழைத் தொடர்ந்து பெற்று அன்பர்கள் பயனெய்தி வருவார்களாக.

இதுவரை சந்தாசெலுத்திவந்துள்ள நேயர்கள், மேலும் தொடர்ந்து இவ்விதழை வாங்கிப் பயனுறுவார்களாக. அன்பர்கள் பலரும் சந்தாத்தொகை அனுப்பி இவ்விதழின் வளர்ச்சியில் பங்குபெறுவார்களாக.

குருவருள்

# அறநெறியும் அருள்நெறியும்

## "எண்குணத்தான்"

இறைவனை 'அறவாழி யந்தணன்' எனக் கூறும் முகத்தால், அவன் பேரருளாளனுதலைக் குறித்த திருவள்ளுவர், பின்பு அவனைக் குறிக்கக் கூறிய தொடர், "எண்குணத்தான்" என்பது. இதற்குமுன் அவர் கூறிய "தனக்குவமை இல்லாதான்" என்ற தொடரால், இறைவனோடு ஒரு நிகர்த்தான பொருள் ஒன்றும் இல்லை என்பது அறிவிக்கப்பட்டது. எனவே, அவர், 'இறைவனுக்கு எட்டுக் குணங்கள் உள்ளன' என்று கூறுவாராயின், 'அக்குணங்கள் அனைத்தும் வேறு எந்தப் பொருளிலும் இல்லாது, இறைவன் ஒருவனிடத்தில் மட்டுமே இருப்பனவாம்' என்பது இனிது விளங்குகின்றதன்றோ! 'அவ்வெட்டுக் குணங்கள் இவை என்பதைத் திருவள்ளுவர் கூறினரா' என்று கேட்டால், 'இல்லை' என்றுதான் சொல்லத் தோன்றுகின்றது. ஏனெனில், அவற்றை அவர் எங்கும் வெளிப்படையாக எடுத்துக் கூறித் தொகுக்கவில்லை. ஆகவே, 'அவ்வெட்டுக் குணங்கள் இவை' என்பதை அவரவரும், தம் தமக்கு ஏற்ற முறையில் கூற முற்படுகிறார்கள்.

அவர்களுள் சைவ சமயத்தார் கூறும் எண்குணங்கள், 'தன்வயத்தனுதல், தூயஉடம்பினனுதல், இயற்கையுணர்வினனுதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், பேரருளுடைமை, முடிவில் ஆற்றல் உடைமை, வரம்பில் இன்பம் உடைமை' என்பன. இவை முறையே சைவாகமத்துள், 'சுவதந்திரத்துவம், விசுத்த தேகம், அநாதிபோதம், சருவஞ்ஞத்துவம், நிராமயம், அலுப்த சத்தி, அநந்த சத்தி திருப்தி எனச்சொல்லப்பட்டன. இவற்றையேபரிமேலழகர் தமிழில் மொழிபெயர்த்துக் கூறி, 'இவ்வாறு சைவாகமத்துக் கூறப்பட்டது' எனப் பிரமாணங் காட்டிச் சென்றார். திருவள்ளுவர் கூறிய எட்டுக் குணங்கள் இவைதாம் என்பதே

பரிமேலழகர் கருத்து என்பது, 'எண்குணங்களாவன' என்று தொடங்கி, இவற்றையே கூறி, பிறவாறு கூறுவார் கொள்கை களை, 'உரைப்பாரும் உளர்' எனப் பிறர் கொள்கைகளாக அவர் உரைத்தலால் இனிது விளங்கும்.

பிறர் கொள்கைகளாகப் பரிமேலழகர், குறித்தவற்றுள் முன் நிற்பன. அணிமாவை முதலாக உடையன. அவை, 'அட்டமாசித்திகள்' எனப்படும் 'அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம்' என்பனவேயாம். இவை, வேத மதங்களுள் யோகமதத்தார் கூறும் சிறந்த பேறுகள். 'சிறந்த பேறுகள்' என்றால், எல்லாப் பேறுகளிலும் சிறந்த வீடுபேறே. எனவே, யோக மதத்தினர் கூறும் வீடுபேறு இச் சித்திகளை முற்றப் பெற்றிருக்கும் நிலையேயாம்.

இவற்றுள், 'அணிமா' என்பது, சிறியதினும் சிறியதாய் இருத்தல். 'மகிமா' என்பது, பெரியதினும் பெரிதாய் இருத்தல். 'இலகிமா' என்பது, நொய்தினும் நொய்தாய் இருத்தல். 'கரிமா' என்பது, திண்ணிதினும் திண்ணிதாய் இருத்தல். 'பிராத்தி' என்பது நினைத்த இடத்தில் தடையின்றிச் சென்றிருத்தல், 'பிராகாமியம்' என்பது, விரும்பியவற்றை விரும்பியவாறே பெறுதல். 'ஈசத்துவம்' என்பது, ஆக்கவும் காக்கவும், அழிக்கவும் வல்லனாதல். 'வசித்துவம்' என்பது, எப் பொருளையும் தன்வசப்படுத்தல்.

இவைகளை இறைவன் இயற்கையில் உடையவன்' என்பதும், 'அந்நிலையை உயிர்கள், 'யோகம்' என்னும் சாதனையாற் பெறவேண்டும்' என்பதும், 'பெற்றுவிட்டால், அதற்கு மேல் அடையவேண்டுவது ஒன்றும் இல்லை' என்பதும் யோக மதத்தினர் கொள்கை. ஆயினும், அவர்கள் கூறும் இந்த எட்டும், பிற பொருளைப் பற்றியவழி அமைவதன்றி, இறைவனுக்குத் தன்னளவில் அமைவனவாய் இல்லை. அவ்வாறாயின் இறைவனுக்கு உள்ள பெருமையெல்லாம் பிறபொருட் சார்பினால் ஆவனவாகுமல்லது, அவனுக்கு இயற்கையாய் உள்ள பெருமைகள் ஆகா. பேலும் அவர் கூறுவன, சைவாகமத்துட் கூறப்படும் முடிவிலாற்றல், தன்வயம் முதலியவற்றுள் ஒவ்வொன்றில் அடங்குவனவே யாதலின், அவற்றுள் ஒன்றையே

வேறு வேறு குணங்களாக விரித்தலால் பயனில்லாமையோடு, விரிக்கப் புகின், இன்னும் பலவாய், 'எட்டு' என்னும் வரையறையையும், கடந்து பல்கும். இன்னும் இவ்வெட்டுச் சித்திகள் உலகத்தார் மருளும் வகையில் சிறந்து காட்டுவனவல்லது, இறைவனது உண்மைச் சிறப்பாய் அமையமாட்டா. அது பற்றியே, பரிமேலழகர் அவற்றைக் கொள்ளவில்லை.

இனி இவற்றையடுத்துப் பரிமேலழகர் குறித்தவை, கடையிலா அறிவை முதலாக உடையன அவை, 'கடையிலா அறிவு கடையிலாக் காட்சி, கடையிலா வீரியம், கடையிலா இன்பம், நாமம் இன்மை, கோத்திரம் இன்மை, ஆயு இன்மை, அழியா இயல்பு' என்பன. இவை சமண சமயத்தார் கூறுவன என்பது, பின்வரும் சூடாமணி நிகண்டுச் செய்யுளால் இனிது விளங்கும்.

கடையிலா ஞானத் தோடு
காட்சிவீ ரியமே இன்பம்
மிடையுறு நாமம் இன்மை
விதித்தகோத் திரங்கள் இன்மை
அடைவிலா ஆயு வின்மை
அந்தரா யங்கள் இன்மை
உடையவன் இறைவன் என்ன
உரைக்கும் ஆருகத நூலே

இவற்றுள், கடையிலா அறிவு முதலிய நான்கும் சொல்லால் வேறன்றிப் பொருளால், சைவாகமம் கூறும் முற்றுணர்வு, முடிவிலாற்றல், வரம்பில் இன்பம் என்பனவேயாம். இறுதியிற் கூறப்பட்ட, 'அழியா இயல்பு' என்பதை வேண்டுமாயின், தனித்த ஒரு குணமாகக் கொள்ளலாம். அழியும் தன்மை அறிவில்லாத பொருளுக்கு உண்டேயன்றி, அறிவுடைய பொருளுக்கு இல்லை. ஆகவே, அஃது 'இயற்கையுணர்வு' என்பதனுள் அடங்குவதேயாம். இனி, 'நாமம் இன்மை, கோத்திரம் இன்மை, ஆயு இன்மை' என்ற மூன்றும், குணங்கள் ஆகா. ஏனெனில், ஒன்றனது இன்மை இன்னொரு பொருட்குக் குணமாதல் இல்லை. 'குணமாவது யாது' என்பார்க்கு 'பொருளை விட்டு நீங்காது அதன்கண் கிடப்பதே குணம்' என்பதே விடை. எனவே, ஒரு பொருளில் உள்ளது குண

மாகுமேயன்றி, இல்லாதது குணமாகாது. இல்லாததையும் குணம் என்று கொண்டால், அதற்கு வரம்பில்லை. எவ்வாறெனின், 'பசுவின் குணம் யாது' என்று வினவினால், 'கன்று ஈனுவது, மக்கட்கேயன்றித் தேவர்க்கும் உரித்தாய பாலைத் தருவது' என்று இப்படிச் சிலவற்றைத்தான் கூறமுடியும். இவையெல்லாம் பசுவினிடத்து இருப்பனவாம். இவ்வாறு இருப்பன சிலவேயாய் அவை வரம்பிற்கு உட்படும். ஆனால், புலால் உண்ணாமை, வாய் பேசாமை, பறந்து செல்லாமை, என்று இப்படிப் பிற பொருளில் இருப்பனவற்றைக் கருத்துட்கொண்டு அவைகளின் இன்மையைப் பசுவின் குணம் எனக் கூறப் புகுந்தால், எத்தனையோ இன்மைகளைக் கூறவேண்டிவரும். அதனால், அவை வரப்பில்லனவாய் ஒழியும். 'சாத்தன் கள்ளுண்ணான்; புலால் உண்ணான்' என்றாற்போலக் கூறுவன. மக்களுள் சிலர்க்கு அவற்றை உண்ணும் இயல்பு' இருத்தலால், 'அத்தன்மை இவனிடம் இல்லை' என்றும் மறுக்கும் அளவிற்கே அவை கூறப்படுவன. அதனால் அவைபோல்வனவும் ஒருவாற்றான் உண்மை கூறுவனவேயாம். ஆகவே, ஒன்றனது இன்மை மற்றொரு பொருட்குக் குணமாதல் இல்லை என்பதே முடிவு 'நாமம், கோத்திரம், ஆயு' என்பன மக்களிடத்து உண்மையான், 'அவை இல்லாமை இறைவன் இயல்பாம்' எனின், உயிர்களிடத்து உள்ளவை நாமம் முதலிய மூன்று மட்டுமன்றி இன்னும் பலவாம். அவை அனைத்தையும், உயிர்க் குணம் இன்மை' எனப் பொதுவாகக் கூற அமையுமன்றி, சிறப்பாக எடுத்துக்கூறின் வரம்பு படுவன அல்ல. அன்றியும், 'இறை எனப்படும் பொருள் எவ்வியல்பிற்று' என வினவுவார்க்கு, அதனது தன்மையைக் கூறல் வேண்டுமன்றி, 'இறை, உயிரன்று' என்ற அன்மையைக் கூறுதல் விடையாகாது. ஆருகதர் கூறும் எண்குணங்களில் சில இத்தன்மையனவாய் அளவை முறைக்கு ஒவ்வாதிருத்தல் பற்றியே அவற்றையும் பரிமேலழகர் கொள்ளவில்லை.

பரிமேலழகர், ஆருகதர் கொள்கையைக் கொள்ளாதவரும் அல்லர்; சைவ சமயக் கொள்கையைக் கொள்பவரும் அல்லர். மேலும், 'திருவள்ளுவர் திருமால் சமயக்கொள்கை யுடையவர்' என்பதே பரிமேலழகர் கருத்து. ஆருகதர் கொள்கையை அவர் குறிப்பாகக் கூறிய இடங்கள்போக, 'இதனை ஆருகதர் உவர்ப்பென்ப' (குறள் - 359 உரை.) என்பதும் காணலாம்.

இவ்வாறு வேறுபட்ட கொள்கையுடையராயினும், 'இறைவனது எண்குணம் சைவாகமத்துக் கூறப்பட்ட எண்குணமே' என அவர் கொண்டதற்குக் காரணம், அவற்றைவிடச் சிறந்தனவாகப் பிற இடங்களில் எவையும் சொல்லப்படவில்லை என்பதே. பிற சமயங்களில் உள்ள நல்லனவற்றை எடுத்துக்கொள்ளுதல் என்பது அறிஞர் அனைவர்க்கும் பொதுவானதே.

'அந்நிய நூலின் விதிஅவி ரோதமேல்
உன்னேல் பழுதென் றுளத்து''

என்னும் சைவசமய நெறிக்குறள், 'சைவ சமயமும் இந்தப் பரந்த நோக்கத்தை யுடையதே' என்பதை நன்கு விளக்கி நிற்கின்றது.

வேற்று மதத்தவர் என்பது பற்றியே அவர்கள் கூறும் அனைத்துக் கொள்கையையும் மறுக்கவேண்டும் என்பதோ, அல்லது வேற்று மதத்தில் உள்ள சில நல்லனவற்றைக் கொள்வதனாலேயே ஒருவர் தங்கள் மதத்தை விடுத்து அந்த மதத்தில் சேர்ந்து விட்டார் என்பதோ இல்லை. மீமாஞ்சை, தருக்கம், யோகம், சாங்கியம் முதலிய மதங்களின் கொள்கைகளுள் தமக்கு ஏற்புடையவற்றைப் பிறமதங்களும் கொண்டமை வெளிப்படை.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்று திருவள்ளுவரும் கூறினர்.

இம்முறையில்தான் பரிமேலழகர் இறைவனது எண்குணத்திற்குச் சைவாகமக் கொள்கையையே கொண்டார். எனவே, 'திருவள்ளுவர் குறித்த எண்குணங்கள் சைவ சமயிகள் கூறும் எண்குணங்களே' என்று கொள்வதே நேர்மையாகின்றது.

திருவள்ளுவர் 'எண்குணங்கள் இவை' என எடுத்துச் சொல்லாமையால், இவை அக்காலத்தில் எளியனவாக வழக்கில் இருந்தன என்பது பெறப்படும். ஏனெனில், இங்ஙனம் வழக்கில் உள்ளவற்றைப் பொதுவாகவே திருவள்ளுவர் குறித்துச் செல்கின்றார். 'இருமை வகை, இயல்புடைய மூவர், நூலோர்

வளிமுதலா எண்ணிய மூன்று" (குறள் - 23, 41, 941) என்றாற் போல்வனவற்றை எடுத்துக்காட்டாகக் கூறலாம். இறுதியிற் குறித்த தொடரில் 'வளிமுதலா' என ஒன்றை எடுத்துக்கூறினும், மற்றவைகளைக் கூறவில்லை. இவ்வாறே தன்வயத்தனுதல் முதலிய எட்டையும் அவர் எடுத்துச் சொல்லவில்லை. என்றாலும் அவர் கடவுள் வாழ்த்தில் இறைவனுக்குக் கூறிய ஆக்கப் பெயர்கள் இக்குணங்களைத் தெரிவிப்பனவாய் உள்ளன. அவை வருமாறு:-

"ஆதி பகவன் முதற்றே உலகு" என்றதில் 'உலகம் இறைவனை முதல்வனாக உடையது' என்றதனால், அதனை அவன் தன் இச்சைப்படி செயற்படுத்துவோனுதல் பெறப் பட்டது. ஆகவே, அது தன்வயம் உடைமையைக் குறிக்கும். "வாலறிவன்" என்றது, "இயற்கை உணர்வைக் குறித்தல் வெளிப்படை. "மலர்மிசை ஏகினான்" என்பது அருட்டிரு மேனியைக் குறிப்பதால் அது தூய உடம்புடைமையைக் குறித்ததாயிற்று. "வேண்டுதல் வேண்டாமை இலான்" என்றது வரம்பில் இன்பத்தைக் குறித்தல் தெளிவு. "இறை" என்பது முற்றும் உணர்தலைக் குறிப்பதாம். "பொறிவாயில் ஐந்தவித்தான்" என்றது, இயல்பாகவே பாசங்களின் நீங்கினமையைக் குறிப்பதே. "தனக்குவமை இல்லாதான்" என்றது, முடிவிலாற்றலுடைமையை விளக்கியதாம். "அற வாழி அந்தணன்" என்பது பேரருளுடைமையைக் கூறிற்று. ஆகவே அவற்றையே இங்கு "எண்குணம்" என்றார் என்பது சொல்லவேண்டா.

"எட்டு வான்குணத் தீசனெம் மான்றனே"

என்று திருநாவுக்கரசரும்,

"இரும்புயர்ந்த மூவிலைய சூலத்தி னானை
இறையவனை மறையவனை எண்குணத்தி னானை"

எனச் சுந்தரரும் அருளிச்செய்தனர். ஆகவே, அறநெறியும், அருள்நெறியும் ஒருபடித்தாதலை அறிந்து மக்கள் பயன்பெறு வார்களாக.

# திருத்தொண்டர் வரலாறு

திருநெறிச்செம்மல், நல்லிசைப்புலவர்,
**வித்துவான். திரு. சா. குருசாமி தேசிகர்.**

(மலர் 27, இதழ் 11, பக்கம் 521 இன் தொடர்ச்சி)

## (12) மானக்கஞ்சாற நாயனார் :

"மலைமலிந்த தோள்வள்ளல் மானக்கஞ் சாறன்"

— திருத்தொண்டத் தொகை.

"கலச முலைக்கன்னி காதற் புதல்வி கமழ்குழலை
நலஞ்செய் தவத்தவன் பஞ்ச வடிக்கிவை நல்கெனலும்
அலகு மெனக்கரு தாதவள் கூந்த லரிந்தளித்தான்
மலைசெய் மதிற்கஞ்சை மானக்கஞ் சாற னெனும்வள்ளலே."

— திருத்தொண்டர் திருவந்தாதி.

சோழவளநாட்டில் கஞ்சாறு என்னும் ஊரில் வேளாளர் குலத்தில் தோன்றியவர் மானக்கஞ்சாற நாயனார். சோழ மன்னர்க்குப் படைத் தலைமை யேற்கும் சிறப்புடையது இவரது குடி. இவர் இறைவனிடத்துப் பேரன்பு கொண்டு விளங்கினர். சிவனடியார்களிடத்து நீங்காத அன்பு கொண்டு அவர்கட்குத் தொண்டுசெய்வதையே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். பெருகிவரும் தம் செல்வமனைத்தையும் சிவனடியார்களுக்குக் குறிப்பறிந்து கொடுத்துவந்தார்.

"மாறில் பெருஞ்செல்வத்து வளம்பெருக மற்றதெலாம்
ஆறுலவும் சடைக்கற்றை அந்தணர்தம் அடியாராம்
ஈறில்பெருந் திருவுடையார் உடையாரென் றியாவையுநேர்
கூறுவதன் முன்அவர்தம் குறிப்பறிந்து கொடுத்துள்ளார்."

**மகப்பேறு :**

மானக்கஞ்சாற நாயனார் மகப்பேறின்றி வருந்திச் சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்து மகப்பேறு அருளுமாறு வேண்டினர். இறைவன் திருவருளால் நாயனாரின் மனைவி கருவுற்று

பெண் குழந்தை ஒன்றை ஈன்றெடுத்தார். நாயனர் இறைவன் திருவருளை வாழ்த்தி மகிழ்ந்து அடியார்களுக்கு அளவில்லாத செல்வங்களை அளித்தார். குழந்தை வளர்பிறைபோலவளர்ந்தது.

**மணம் பேசுதல் :**

அழகின் திருவுருவாய் மானக்கஞ்சாற நாயனரின் திருமகள் வளர்ந்து மணப் பருவத்தை அடைந்தாள். அப்போது ஒத்த மரபில் வந்தவரும், நிறைந்த சிவபக்தருமாகிய ஏயர்கோன் கலிக்காம நாயனர் தமக்கு இப் பெண்ணை மணம் பேசிவருமாறு முதியோரை அனுப்பினர். மானக்கஞ்சாறரும் அவர்களை வரவேற்று உபசரித்துத் தம் மகளை மணஞ்செய்து கொடுக்க இயைந்தார். ஏயர்கோன்கலிக்காம நாயனரும் அதனை அறிந்து பெருமகிழ்வு அடைந்தார். திருமணநாள் குறிக்கப்பெற்றது. உறவினர்களும் உரிய நேரத்தில் வந்துசேர்ந்தனர். மணப் பாலிகைகள் அமைக்கப்பெற்றன. நகரமே விழாக் கோலம் கொண்டது. முதல்நாள் மணமுரசு முழங்க ஏயர்கோன் கலிக் காமநாயனரும்கஞ்சாற்றுக்குஅண்மையில்வந்து தங்கியிருந்தார்.

**இறைவனின் திருவிளையாட்டு :**

சிவபெருமான் மானக்கஞ்சாற நாயனரது பக்தித்திறத்தை உலகறியச்செய்யத் திருவுளங்கொண்டு மாவிரத முனிவர் வேடங் கொண்டு நாயனரின் இல்லத்திற்கு எழுந்தருளினர். நீறணிந்த நெற்றி, குண்டலமணிந்த செவி, என்புமாலை யோகபட்டிகை மயிர்க்கயிற்றின் பூணூல் இவை யணிந்த மார்பு. இடையில் கோவணம், மேலாடை, விபூதிப்பை, கையில் என்புமணிகோத்த கயிறு. திருவடியில் பஞ்சமுத்திரை ஆகிய மாவிரத முனிவர் திருக்கோலத்தோடு எழுந்தருளிய அடியவரை நாயனர் அன்போடு எதிர்கொண்டழைத்துப் பணிந்தார். முனிவர் நாயனரின் வீட்டில் நடைபெற இருக்கும் மங்கல நிகழ்ச்சி யாது எனக் கேட்டு, "மங்கல முண்டாகுக" என ஆசி வழங்கினர். நாயனர் மீட்டும் வணங்கி யெழுந்து, வீட்டினுள் சென்று மணக் கோலம் புனைந்திருந்த தம் திருமகளை அழைத்துவந்து, முனிவரின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கி வாழ்த்துப் பெறுமாறு பணித் தார். நாயனரின் திருமகளும் அவ்வண்ணமே வணங்கினள்.

**நாயனாரின் துணிவு :**

தம்மைப் பணிந்தெழுந்த மணமகளது நீண்டு வளர்ந்த மேகம் போன்ற அழகிய கூந்தலைக் கண்டார் முனிவர். உடனே அவர் நாயனாரைப் பார்த்து "இப்பெண்ணின் தலைமயிர் நாம் அணியும் பஞ்ச வடிக்கு ஏற்றதாகும்" என்று கூறினார். அதைக் கேட்ட நாயனார் மகிழ்ந்து உடனே தம்முடைய உடை வாளை உருவித் தம் மகளின் கூந்தலை அடியோடு அரிந்து மாவிரதியாரிடம் அளித்தார். அவ்வளவில் அதனை வாங்குவதுபோல நின்ற முனிவர் மறைந்தார். இறைவன் வானவீதியில் அம்மையப்பராய் விடைமீது எழுந்தருளி நாயனார்க்கு அருட்காட்சி வழங்கினார். 'நம்பால் கொண்ட அன்பின் பெருக்கை உலகறியச் செய்தோம்' என்று கூறினார். நாயனாரும் இறைவன் தம்மை ஆட்கொண்டு அருளிய திறத்தை வியந்து பணிந்தார்.

**ஏயர்கோன்கலிக்காமர் திருமணம் :**

அப்போது மணமகனும் நாயனாரின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அங்கு நடந்த நிகழ்ச்சியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தார். முண்டிதமான பெண்ணை எவ்வாறு மணப்பது என்று சிறிது மனம் தளர்ந்தார். அவ்வளவில் இறைவன், 'கலிக்காமா! மனந்தளரவேண்டா; இப் பெண்ணின் கூந்தலை மீளக் கொடுப்போம்' என்று திருவாய் மலர்ந்து அருளினார். கலிக்காமரும் மனம் தேறினார். மணமகளின் கூந்தல் முன் போலவே வளர்ந்து விளங்கியது. கலிக்காமரும் மகிழ்வோடு அப்பெண்ணைத் திருமணம் புரிந்துகொண்டார். திருமண மகிழ்ச்சியால் கலிக்காமர் செல்வங்கள் பலவற்றையும் யாவர்க்கும் வழங்கி, விடை பெற்று, சுற்றம் சூழ, மணமகளுடன் தம் திருப்பெருமங்கலம் என்னும் நகருக்கு எழுந்தருளினார்.

# " கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான் "

**வித்துவான். திருமதி. ப. நீலா**

( மலர் 27, இதழ் 12, பக்கம் 585 இன் தொடர்ச்சி )

## (7) குண்டோதரனுக்கு அன்னமிட்டது.

பன்னகேசரும் புலிப்பாதரும் வேண்டிக் கொண்டபடி வெள்ளியம்பலத்துள் ஆடிய பின்பு - மணங் காணவந்த மன்னவர்களுக்கும், மாதவர்களுக்கும் அறுசுவைப் போனகம் அளித்து தாம்பூலங்கொடுத்து விடைகொடுத்தனுப்பிவைத்தான் விடையேறிய பெருமான்.

### வேல்விழியாள் கொண்ட விசனம் :

தடாதகைப் பிராட்டியாரின் திருவடியை வணங்கிய அட்டிற்றெழிலோர் இன்று சமைத்த உணவில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூடச் செலவழியவில்லை; எஞ்சியுள்ளதை என் செய்வது என விண்ணப்பித்தனர். பிராட்டியும் இறைவன் திருமுன்பு சென்று ' அடிகளே ! முப்பத்து முக்கோடி தேவர் புடைசூழத் தாங்கள் எழுந்தருளுவதை எண்ணிச் சித்தமாக்கிய போனக வகைகளெல்லாம் இமயக் குன்றமும், அதன் புறத்தே சூழ்ந்துள்ள குன்றுகளும் போலக் கிடக்கின்றன. தங்களின் திருவுள்ளம் யாதோ ! எனப் பணிந்து கேட்க, பெருமான் ' இவளிடம் யாம் ஒரு திருவிளையாடலைச் செய்வோம்' என்று கருதியோ அல்லது குறட்பூதத்தின் ஆற்றலை உலகறியச் செய்வோம் என்பது கருதியோ அம்மையைப் பார்த்துப் புன்னகை பூத்தார்.

### விசனம் வியப்பான விந்தை :

பாண்டியனின் மகளாகிய நீ உனது செல்வப் பெருக்கை யாம் அறியக் காட்டினுய்போலும், இவ்வரும்பெறல்விருந்துணப்

பசித்தவர் யாரும் இங்கில்லையே என்செய்வதெனப் பனிமதி முடியன் பரிகாசம் செய்தான். அப்போது அவனருளால் வடவைத்தீ அருகே நின்ற குறட்பூதத்தின் வயிற்றுள்புக, அவன் 'ஆ' வென அங்காந்து - பசித்தீச்சுட நான் தளர்ந்தேன் - என விண்ணப்பஞ் செய்தான்.


தடாதகையே! குடை பிடித்துவரும் இக்குறுந்தாட்பூதத்திற்கு ஒரு பிடி சோறிடு. பின்பு பிற பேசுவோம் - என்று சொல்ல - அம்மையின் ஏவலாலே ஏவற்பெண்டிர் சிலர் அவனை அன்னமலையருகே அழைத்துச் சென்றனர். ஒரு நொடியில் அன்னமலை வற்றி அருகிருந்த ஆகாரக் குவியல்களும் அவன் வயிற்றில் அடைக்கலமாயின. பால், தயிர், நெய், தேன் நிறைந்திருந்த மிடாக்களெல்லாம் வற்றி உருண்டன. பழத் தொகுதிகளும், பலகார வகைகளும், மென் சுவைத் தண்டாம் கரும்புக் கட்டுகளும், தெங்கிளநீர்களும், வேகா உணவும், (அரிசி) காய்கறிகளின் வர்க்கமும் அவனது பசியை அடக்கப் போதுமானதாக இல்லை. இவையெல்லாம் ஆகுதியில் ஊற்றிய நெய்யைப் போல் அவனது பசித்தீயை கிளர்ந்தெழச் செய்தன. இச்செயலைக்கண்ட பாவைமார்கள் பதைத்தனர் - பதுங்கினர்.

'சிலம்பு நூபுரச் சிறடிச் சேடியர் சில்லோர்
அலம்பு வால்வளைக் கைநெரித் ததிசய மடைந்தார்
புலம்பு மேகலை யார்சிலர் பொருக்கென வெருண்டார்
கலம்பெய் பூண்முலை யார்சிலர் கண்புதைத் திரிந்தார்.'

### நிலங்கிளைத்து நாணி நின்றாள் நிமலை :

அம்மை இதனைக்கண்டு அதிசயமுற்றாள். அண்ணலருகே சென்று நாணி நிலங்கிளைத்து நின்றாள். பற்றற்றாரின் பற்றான பெருமான் 'உணவின் பெருக்கம் இன்னும் எஞ்சுமானால் வேறு சில பூதங்களை விடுப்பேன்; நீ கவலையை விடுக' என்ற அளவில் அம்மை அவரடி பணிந்து 'இப் பூதத்தின் பசியே இன்னும் அடங்குமாறில்லை - இன்னும் பூதங்களை விடுவீரானால் அவர்கள் இந் நிலவுலகையே வயிற்றினுள் அடக்குவர். அதனால் உமக்குக் "காலருத்திரர்" என்ற பெயர் உறுதியாகும்' என்றுரைத்த அளவில், பிறையெயிறுடைய குறட் பூதம் எம்பிரானிடம் வந்து பனிமலைபோல் கிடந்த போனகத்தைத் தொட்டு வாய்மடுத்தும்

திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேஸ்வரசுவாமி தேவஸ்தானம்
கார்த்திகைமாதம் இரண்டாவது சோமவார தரிசனத்துக்கு (25—11—68




திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும்
தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமும்
எழுந்தருளிய காட்சி

வேளூர் ஸ்ரீ வைத்தியநாதசுவாமி தேவஸ்தானம்
கார்த்திகை தரிசனத்துக்கு (3—12—68)



திருவாவடுதுறை ஆதீனம்
ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் எழுந்தருளியபோது
பூரணகும்ப மரியாதையோடு வரவேற்பு

சிதம்பரம் தருமை ஆதீனம்
ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தில்



தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமும்
திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும்
கொலுவிற்றிருக்கும் திருக்காட்சி

தில்லை ஸ்ரீ சபாநாயகர் ஆலய தரிசனத்துக்கு



தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானமும்
திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானமும்
எழுந்தருளியபோது பொது தீட்சிதர்கள் வரவேற்பு

என் வயிறு 'இட்டு உண்ணுதவர் வயிறு போல'க் காந்துகிறதே என்றலறினன்.

" நட்ட மாடிய சுந்தர! நங்கையெம் பிராட்டி
அட்ட போனகம் பனிவரை யனையவாய்க் கிடந்த
தொட்டு வாய்மடுத் திடவுமென் சுடுபசி தணியா(து)
இட்டு ணுதவர் வயிறுபோற் காந்துவ தென்ருன். "

முப்புரத்திட்ட தீயே என்னுதரத்துட் புகுந்ததோ என்று அண்டங்கள் வெடிபட அலறுவான். ஐயகோ - என்பான். ஆவி உலருகிறதே என்று அயர்வான்.

## (8) அன்னக் குழியும் வைகையும் அழைத்தது

தடாதகையின் தளர்ந்தொசிந்த நிலேகண்ட நீலகண்டன் * தவனமா பசியுடையவன் பொருட்டாக, அன்னபூரணியை நினைக்க; அவளும் - நிலத்தின் நடுவே நான்கு குழிகளினூடே தயிர் கலந்த அன்னமாக எழுந்தாள். மலயத்துவசனின் மருகன் குண்டோதரனை நோக்கி உன் பசி தணிய உண்க' என அருளினன். கடல் கலக்கும் மத்தென - அத்தயிர்ச் சோற்றுக் கடலில் தனது கரங்களை நாட்டி உண்டபோது 'வேத நாயகனின் தாமரைப் பாதங்களில் பக்தி வைத்து வீடுணர்ந்தார் பழவினை போல' அவனது பசி தொலைந்தது.

**தாகத்தால் தடுமாறுதல் :**

உடம்பெல்லாம் வயிருக உண்டபின்பு எழுந்த அடங்கா நீர் வேட்கை காரணமாக வாவி - குளம் கூவமெல்லாம் வற்றும்படி நீருண்டான் பின்னும் தாகம் தீராத அவனுடைய துன்பத்தைப் போக்க இமையவன் தன் சடைமீதுள்ள கங்கையைத் தரைக்கண் வருமாறு அழைத்தான்.

**நங்கை கேட்ட நல் வரம் :**

கங்கையாள், பெருமானே! பகீரதன் பொருட்டு முன்பு வந்து தீர்த்தமாகி மக்களின் பாவங்களை ஏற்றுக்கொள்கிறேன்;

---

* தவனம் – தாகம்.

இப்பொழுது நான் நதியாக வரும்போது என்னைக் கண்டவர் - உண்டவர் அனைவரும் நலமுற ஆசி நல்குதல் வேண்டும் என வேண்டினாள். விடையேறி - அவள் விருப்பத்தைப் பூர்த்தி செய்தான்.

**நதியெனும் நங்கை நடந்தனள் :**

அலைகள் - வளையல்களாக, முத்துக்கள் - பற்களாக, நுரை - ஆடையாக, கொடி - இடையாக, கருமணல் - கூந்தலாக, கயல்கள் - கண்களாகப் பிறங்கி ஒளி செய்ய ஓடிவருகிறாள். பிணையோடு கலையும், பிடியோடு களிறும், வயிற்றில் அணைத்துக் கொண்டுள்ள குட்டியோடு குரங்கும் வெள்ளத்தில் வந்தன.

**களிறுகக் கங்கை :**

பிளிறொலியால் - மரம் அசுழும் பெருவலியால் விளா மரத்தைச் சாய்த்து, முத்துக்களைச் சிதறி மான்மதத்தில் வண்டுகள் சூழவரும் அசைவால், நுரையென்ற முகபடாமிட்டுவருகின்ற கங்கைகளிற்றை யொத்தாள்.

**அரவமானாள் அணங்கு :**

நீடிய பிலமுறும் தன்மை, நிர்மலன் முடிமீது ஆடிடும் அழகு மணிகளைத் தலையில் தாங்கிடும் பெருமை - இவற்றால் அரவமெனக் காட்சி தருகிறாள்.

**தெய்வங்களை ஒத்தாள் :**

மண்ணகழ்தலால் வராகமூர்த்தியையும் - அலைகள் கொண்டு விண்ணளாவ உயருப்போது வாமனமூர்த்தியையும் - சுவை மிகுந்த வெண்ணெயும் தயிரும் கலந்து கொண்டு வருதலால் கண்ணனையும் ஒத்தாள் கங்கை.

**மூவேந்தரை நினைவூட்டினாள் :**

ஆரொடும், பனையொடும் நிம்பத்தாரொடும் புலி சிலை கயலென இவற்றொடும் வரும் நதி மூவேந்தர்களும் இணைந்து வருவது போலத் தோன்றிற்று.

கல்லாதவர்கள் இயற்றிய கவிதைபோல கலங்கி வந்த கங்கை - அகம் - புறம் என்ற துறைகள் பெற்ற சான்றோர் கவிபோல - பல துறைகளையும் பெற்று, கவிதையின் பொருளாழம் போல - செல்லும் வழிதொறும் ஆழமுடைத்தாகிப் பின்பு தெளிந்து எல்லோரும் பயன்கொள்ளத் தங்கியது.

' கல்லார் கவிபோற் கலங்கிக்கலை மாண்ட கேள்வி
வல்லார் கவிபோற் பலவான் றுறை தோன்ற வாய்த்துச்
செல்லாறு தோறும் பொருளாழ்ந்து தெளிந்து தேயத்
தெல்லாரும் விழ்ந்து பயன்கொள்ள விறுத்த தன்றே."

## தாகம் தணிந்த பூதத்தடியான் :

இப்படிப் பொங்கிவரும் நதியருகே அமர்ந்த குண்டோதரன் தன் இரு கரங்களையும் ஆற்றின் கரையாக நிறுத்தித் தண்ணீரனைத்தும் வயிற்றுள் செல்ல வகை செய்தான். தாகமும் பசியும் அடங்கவே பரம் பொருளைத் துதித்து ஆடினன். ஆனந்த முற்றுப் பாடினன்.

## பெயர் பல பெற்றுப் பிறங்கினுள் :

குண்டோதரனின் தாகம் தணிக்கவந்த கங்கையை, 'வையை' என்றனர். சிவனது சடையினின்றும் இறங்கியதால் 'சிவகங்கை' எனச் சுட்டினர். சிவனது எட்டுத் திருவுருவங்களில் இதுவுமொன்று எனத் தெளிந்தோர்க்கு ஞானம் தரலால் 'சிவஞான' தீர்த்தமானுள். காற்றெனக் கடிது வரலால் 'வேகவதி' என விளம்பினர். மதுரையை மாலையாகச் சூழ்கின்றுள் எனவே 'கிருதமாலை' எனக் களிப்போடிவளை அழைத்தனர்.

(வளரும்)

# கலைவளர் மாளிகை

திரு. அ. கலியபெருமாள் M. A.

(மலர் 27, இதழ் 12, பக்கம் 603 இன் தொடர்ச்சி)

" திண்திமில் வன்பரதவர்,
வெப்புடைய மட்டுண்டு
தண்குரவைச் சீர் தூங்குந்து" (புறம் - 24)

ஆய் அண்டிரனின் வளம்மண்டிய குன்றத்துக் குறவர், வேங்கை வளரும் முற்றத்தே மூங்கிற் குழலில் இருந்த மதுவைக் குடித்து மகிழ்ந்து குரவை யாடுகின்றனர்.

" குறியிறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து
வேங்கை முன்றில் குரவை அயரும்" (புறம் - 129)

முல்லைக்கலியில் சோழன் நல்லுருத்திரன்,

" குரவை தழீஇ யாம் மரபுளி பாடித்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்" (கலித் - 103)

என்னும், அகப்பாட்டில் உலோச்சனர்,

" கொண்டல் இருபணல் குரவை முனையின்
வெண்டலைப்புணரி ஆயமொடாடி" (அகம் 20)

என்றும் கூறியிருத்தலால் அக்காலத்தே குரவைக் கூத்து எங்கும் பரவியிருந்தது விளங்கும்.

கூத்து நிகழுங்கால், மங்கையர்க்கு ஆடவர் முதல்வராய்க் கைதந்து ஆடல் தொடங்குதல் மரபு. இதனைத் தலைக்கை தருதல் என்ப. கால்விளக்கு ஒளி வீசுகிறது. அதன் ஒளியிலே முழவு அகவ ஆடும் துணங்கைக் கூத்தில் கைகளைப் பிணைந் தாடும் மகளிர்க்குக் கைகளைக் கோத்துக்கொள்ளும் புணையாக ஆடவர் தலைக்கை தருதலைப் பதிற்றுப்பத்தில் காணலாம்.

" சுடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து
முழாவிமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணையாகச்
சிலைப்புவல் ஏற்றின் தலைக்கை தந்து " (பதிற் - 52)

புன்னை மலர்களால் கட்டப்பெற்ற மாலையை அணிந்த காளையர் வளையணிந்த தையலார்க்கு முதற்கை கொடுப்பதைத்,

" தூவற் கலித்த தேம்பாய் புன்னை
மெல்லிணர்க் கண்ணி மிலைந்த மைந்தர்
எல்வளை மகளிர் தலைக்கை தரூஉந்து " (புறம் - 24)

விழாக் காலத்துக் கூத்தர் ஆடுவதை மதுரைக்காஞ்சி " விழவின் ஆடும் வயிரியர் " என்று குறிப்பிடுகிறது. கூத்தர் தம் ஆடலுக்கு வேண்டிய இசைக் கருவிகள் பலவற்றையும் கொண்டிருப்பதைப் " பல்லியக்கூத்தர் " என்று சிறுபாணாற்றுப் படை கூறுவதால் அறியலாம்.

புறத்தில் பெருந்தலைச் சாத்தனார் கூத்தரைப்,

' பண்ணமை நரம்பின் பச்சை நல்யாழ்
மண்ணமை முழவின் வயிரியர் " (புறம் - 164)

என்று குறிப்பிடுகிறார். ஊர்தோறும் சென்று கூத்தாடுவதை அகப்பாட்டால் அறியலாம்.

" சில்லரி கறங்கும் சிறுபல்லியத்தொடு
பல்லூர் பெயர்வன ராடி " (அகம் - 301)

நாடகத்தை நல்ல முறையில் வளர்த்தனர் தமிழர். ஊர்தோறும் நாடகங்கள் நடைபெற்றன என்பதற்குப் பல ஆதாரங்கள் உள்ளன.

" நாடக மகளிர் ஆடுகளத் தெடுத்த
வீசி வீங்கின்னியம் " (பெரும்பாண் - 55 - 56)

" பாடலோர்த்தும் நாடகம் நயந்தும்
வெண்ணிலவின் பயன் துய்த்தும் " (பட்டின 336 - 37)

என்பனபோன்ற அடிகள் தமிழகத்து நாடகப் பழமைக்குச் சான்றுபகரும்.

கூத்தர் வேறு வேறு கோலம் புனைவதை இளங்கோவும், சாத்தனாரும் தத்துவ விளக்கம் கூறப் பயன் படுத்திக்கொண்டனர். கூத்தாடுவோன் ஒருவனே. அவன் போடும் வேடங்களோ பல. அது போன்றே உயிர் ஒன்றேயாகி, ஓரிடத்தில் இராது செய்வினைக்கேற்ப உடம்பு பல பெறும்.

" ஆடுங் கூத்தர்போல் ஆருயிர் ஒருவழிக்
கூடிய கோலத் தொருங்கு நின்றியலாது
செய்வினை வழித்தாய் உயிர் செலும் "

(சிலம்பு, நடுகற் - 165 - 60)

முற்பிறவியில் கச்சயமாளும் துச்சய வேந்தனின் மனைவியராக இருந்த தாரையும், வீரையுமே மாதவி சுதமதியாகப் பிறந்தனர். இதனைக் கூறவந்த அறவணவடிகள் இருவரையும் நோக்கி,

" ஆடும் கூத்தியர் அணியே போல
வேற்றோர் அணியொடு வந்தீரோ "

என்று விளம்புகிறார். கூத்தி ஒருத்தியே வேறு வேறு கோலம் புனைகிறாள். உயிர் ஒன்றே; ஒரு பிறவியில் தாரை என்றும், மறுபிறவியில் மாதவி என்றும் உடம்பேற்கிறது.

உலகமே ஒரு நாடகமேடை யென்றும், மக்களெல்லாம் நாடக மாந்தரென்றும் ஜெகம்புகழ் நாடகக்கவி ஷேக்ஸ்பியர் கூறியிருத்தல் யாவரும் அறிந்ததே. ஷேக்ஸ்பியருக்கும் பல நூற்றாண்டுகட்கு முன் வாழ்ந்த செந்தமிழ்ப்பாவலர் சீரிய உரையைச் செவியின் ஓர்த்துச் சிந்தை மகிழுங்கள்.

" விழவின், கோடியர் நீர்மை போல முறை முறை
ஆடுநர் கழியும் இவ்வுலகம் " (புறம் - 29)

கூத்தாடும் அரங்கினை நாடக ஆசிரியர் வகுத்த முறைப்படி அமைத்தனர் தமிழ் நாட்டார். அந்நாள் கூத்தரங்குகள் இந்நாள் அரங்குகளுக்கு வசதியிலும், அமைப்பிலும் சற்றும் குறைந்தவை அல்ல. கூத்தரங்கம் அமைக்க முற்படுவார் முதற்கண் சேற்று நிலம், உவர்நிலம் முதலிய பொருந்தா நிலங்களை ஒதுக்கி ஊரின் நடுவே தேரோடும் வீதிகளின் எதிர்முகமாக உள்ள இடத்தில் அமைத்தல் வேண்டும். பொதியில் முதலாகும் புண்ணிய மலைகளிலே வளர்ந்த மூங்கில்களைக் கொண்டு

அரங்கம் இயற்றப்பட வேண்டும். இருபத்துநான்கு விரல் அளவு கொண்ட கோலால் அகலம் ஏழு கோலும், நீளம் எண் கோலும், குறட்டுயரம் ஒரு கோலும் இருக்குமாறு கட்டவேண் டும். அரங்கின் அகலத்துக் கிட்ட பலகையிலிருந்து நான்கு கோல் உயரத்தில் உத்தரப் பலகையை அமைக்கவேண்டும். அரங்கினுள் செல்லுதற்கும் வெளியே வருதற்கும் இரண்டு வாயில்கள் உண்டு. அக்கால அரங்கில் ஒளியமைப்பும் பாராட்டத்தக்க முறையில் இருந்தது. தூண்களின் நிழல் அரங்கில் விழாதபடி, மாண்புறு நிலை விளக்கை ஏற்றியிருந்த னர். இடத்தூண் இடத்து உருவுதிரையாக ஒருமுக எழினியும். இரண்டு வலத்தூணிடத்தும் உருவுதிரையாகப் பொருமுக எழினியும், மேற்கட்டுத் திரையாகக் கரந்துவரலெழினியும் கட்டியிருந்தனர். மாதவி ஆடிய அரங்கத்தின் மாண்பைக் காண்க.

" எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது
மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு
புண்ணிய நெடுவரைப் போகிய நெடுங்காழ்
கண்ணிடை ஒருசாண் வளர்ந்தது கொண்டு
நூனெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோலளவு இருபத்து நால் விரலாக
எழுகோல் அகலத்து எண்கோல் நீளத்து
ஒருகோல் உயரத்து உறுப்பினதாகி
உத்தரப் பலகையோட ரங்கின் பலகை
வைத்த இடைநிலம் நாற்கோலாக
ஏற்ற வாயிலிரண்டுடன் பொலியத்
தோன்றிய அரங்கில் தொழுதனரேத்த
பூதரை எழுதிய மேனிலை வைத்துக்
தூணிழற் புறப்பட மாண்விளக் கெடுத்தாங்கு
ஒருமுக எழினியும் பொருமுக எழினியும்
கரந்துவரல் எழினியும் புரிந்துடன் வகுத்தாங்கு
ஓவிய விதானத்துரைபெறு நித்திலத்து
மாலைத்தாமம் வளையுடன் நாற்றி
விருந்துபடக் கிடந்த அருந்தொழில் அரங்கம் "

(அரங்கேற்று - 95 - 113)

[ தொடரும் ]

# புதன்

வேதாந்த சிரோமணி,

**பிர்மஸ்ரீ. K. இராஜகோபால சாஸ்திரிகள்**

கிரஹங்கள் ஒன்பதில் உருவத்தில் சிறியதாகத் தென்படுவது புதன். இது சூரியனுக்குச் சமீபத்தில் இருப்பதால் எல்லா மாதங்களிலும் இதைப் பார்க்கமுடிவதில்லை. ஜூலை, ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் சூர்யோதயத்திற்கு ஒருமணி முன்பாக கிழக்கே அடிவானத்தில் சிறிது உயரத்தில் காணலாம். ஜனவரி பிப்ரவரி மார்ச்சு மாதங்களில் மாலையில் சூரியன் மறைந்த ஒருமணி நேரம் வரையில் மேற்கே காணலாம். நக்ஷத்திரங்கள் எல்லாவற்றையும்விட இது ஒளிமிகுந்து தோன்றும். சுக்கிரன் ஒன்றே இதைவிட அதிக ஒளியுடையது. சந்திரனைப்போலவே புதனும் சூரியனிடமிருந்தே ஒளியைப் பெறுகிறது. சூரியனை ஒருதரம் சுற்றிவர 88 நாட்கள் ஆகும். சூரியனை நோக்கியுள்ள புதனுடைய பாகம் மிகவும் உஷ்ணமாகவும் மறுபுறம் மிகவும் குளிர்ச்சியாகவும் இருப்பதால் இங்கு உயிர்கள் வாழமுடியாது.

சந்திரனுக்கு குருபத்னியான தாரையிடம் கூடாஒழுக்கம் கொண்டு பிறந்த இவன் உலகில் சந்திரவம்சம் உண்டாகக் காரணமாக ஆனான். இவனுடைய தவச்சாலையில் புகுந்து இளன் இளை என்ற பெண்ணாக ஆனான். புதன் இளாவை மணந்து புரூரவசு என்ற மன்னனைப் பெற்றான். ஒருவனுக்குப் பல மனைவிகள் இருந்து, அவரில் ஒருத்திக்குப் பிறந்த மகனை, யாவருக்கும் மகனாகவே கூறுவது வழக்கம். ஆதலின் தாரையின் மகனான புதனைச் சில துதிகளில் ரோஹிணீ புத்ரன் என்று சொல்லியிருப்பது பிழைபட்டதாக ஆகாது.

புதனைப்பற்றி தியானங்கள் பல உள்ளன.

1. ஸிம்மாரூடம் சதுர்பாஹும் கட்கசர்மகதாதரம் ।
ஸோமபுத்ரம் மஹாஸௌம்யம் த்யாயேத் ஸர்வார்த்த ஸித்தயே ॥

என்பது புத மந்திரத்திற்குரிய தியானம். இதில் நான்கு கையுடையவன் என்று கூறப்பட்டிருப்பினும் கத்தி, கேடயம், கதை ஆகிய மூன்று ஆயுதமே கூறப்பட்டிருக்கிறது.

2. புதம் புஸ்தக ஹஸ்தம் ச பீதபுஷ்பஸமத்யுதிம் ।
த்யாயேத் ஞானமயம் தேவம் ப்ரஸன்னம் ச சதுர்புஜம் ।
கட்க சூலகதாபாணிம் வரமுத்ராங்கிதம் ப்ரபும் ।
பீதாச்வரதமாருஹ்ய மேரும் யாந்தம் ப்ரதக்ஷிணம் ।

என்ற கவச ஸ்தோத்திரத்திற்குரிய தியானத்தில் புஸ்தகம், கத்தி, சூலம், கதை இவைகளையுடையவர், நான்கு கையுடையவர் என்று கூறியிருக்கிறது. ஆனால் வரமுத்திரையும் இருப்பதாகக் கூறியிருப்பதால் ஒரே கையில் வரமுத்திரையும் புஸ்தகமும் இருக்கிறதுபோலும்.

3. புஜைச்சதுர்பிர் வரதாபயாஸிகதா வஹந்தம் ஸுமுகம்
ப்ரஸந்நம் பீதப்ரபம் ஸோமஸுதம் ஸுரேட்யம் ஸிம்மே
நிஷண்ணம் புதமாச்ரயாமி

என்ற ஸ்தோத்திரத்தில் நான்கு கைகளில் வரதம், அபயம், கத்தி, கதை இருப்பதாகக் கூறப்படுகிறது.

4. மற்றோரிடத்தில் கன்யாயா மிதுனஸ்யாபி ராச்யோரதி பதிர்த்வயோ: ஆதித்யேசான திக்பாகே மந்த்ர மந்த்ரார்த்த தத்வவித் | அஸிதண்டௌ ச பிப்ராண : ஸமஸ்த ஸுபல ப்ரத: என்று கத்தியும் தண்டமும் தரித்து இருப்பதாகக் கூறப்படுகிறது

விரதசூடாமணியில் புதவார விரதத்தில் வாயு அக்னி இவற்றால் உண்டான பொன்னிறமான எட்டுக் குதிரைகள் பூட்டி தேரில் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது. முற்கூறிய கவச ஸ்தோத்திரத் தியானத்திலும் (பீதாச்வரத மாருஹ்ய) மஞ்சள் நிறக் குதிரை பூட்டிய தேரில் ஏறி மேருமலையை பிரதக்ஷிணம் செய்வதாகக் கூறப்பட்டிருக்கிறது மற்ற ஸ்தோத்திரங்களிலும் தியானங்களிலும் சிங்கத்தில் ஏறி இருப்பதாகக் காணப்படுகிறது. யாவும் ஒவ்வொரு வகையில் பொருந்துவதேயாம்.

பாதஞ்சல யோக சூத்திரத்தில் தியானம் செய்ய ஆலம்பனமாக (பிடிப்பாக) எதைக்கொள்ளலாம் என்று கூறுமிடத்து "யதாபிமதத்யானாத்வா" என்று சூத்திரம் காணப்படுகிறது. முருகனையோ, கணபதியையோ, காளியையோ, சிவனையோ, விஷ்ணுவையோ, தியானத்திற்கு பற்றுக்கோடாகக் கொள்ளலாம். இம்மாதிரியான திருவுருவங்களில் மனது ஒருமுனைப்பட்டு தியானம் செய்ய இயலாவிட்டால் எந்தப் பொருளில்

மனம் அசையாது நிற்குமோ அதையே தியானத்திற்கு ஆலம் பனமாகக் கொள்ளலாம் என்று சூத்திரார்த்தம் வர்ணிக்கப் படுகிறது " தியான பூசா நிமித்தாய நிஷ்களம் ஸகளம் பவேத் " என்ற ஆகம வாக்கியமோ நிட்களரூபமே பூசைக்காகவும் தியானத்திற்காகவும் சகளமாக ஆகும் என்று கூறுகிறது. கீதை யிலும் " யோ யோ யாம் யாம் தனும் பக்த ச்ரத்தயார்ச்சிது மிச்சதி। தஸ்ய தஸ்யாசலாம் ச்ராத்தாம் தாமேவ விததாம்யஹம்॥ யார் யார் எந்த எந்த ரூபத்தை அர்ச்சிக்க விரும்புகின்றனரோ அவரவர்க்கு அதற்கு வேண்டிய சிரத்தையை உண்டுபண்ணு கிறேன் " என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆதலால் பரம பக்தர்களான ரிஷிகள் எப்படியெல்லாம் தியானம் செய்தனரோ அப்படியெல்லாம் உருவமுடையவராகக் காட்சியளிப்பது பொருத்தமே.

மஞ்சள் நிறமான புஷ்பம், சந்தனம், வஸ்திரம், குடை, கொடி, தேர் முதலியவற்றில் பிரியமுள்ளவன். இவனுக்குரிய தான்யம் பச்சைப்பயறு. நாயுருவி சமித்தாகப் பயன்படும். சூரியனுக்கு வடகிழக்கே பாண (அம்பு) ரூபமான மண்டலத்தில் வடக்குமுகமாக இருப்பான். மகததேசத்திற்கு அதிபதி. ஸௌம்யவருஷம் வைசாக சுக்ல ஏகாதசியில் உத்தரநக்ஷத்திரத் தில் பிறந்தவன். மிதுனம் கன்னி இந்த இராசிகளுக்கு அதிபதி. கன்னியில் உச்சம். மீனத்தில் நீசன். ஜோதிடம் புதனை வித்யா காரகன் என்று கூறும். திரிவிக்ரமாவதாரம் எடுத்த விஷ்ணு அதிதேவதை. உபேந்திரனாக உள்ள நாராயணன் பிரத்யதி தேவதை.

ஜ்யோதிட சாஸ்திரத்தில் பூர்ணசந்திரன், குரு, சுக்ரன் இவை சுபகிரஹம் என்றும், தேய்பிறைச் சந்திரன், சூரியன், சனி, செவ்வாய் இவர் பாபகிரஹம் என்றும் கூறப்படும். புதனோ சேர்ந்திருக்கும் கிரஹத்தை அனுசரித்து பாபியாகவும் சுபனாக வும் விளங்குகிறான். க்ஷீணேந்த்வர்கார்கி பூ புத்ரா: பாபாஸ் தத் ஸம்யுதோ புத: । பூர்ணசந்த்ர ஸுராசார்ய சுக்ராஸ் தேஸ்யுச்சுபக்ரஹா: ।

ஒருவனுடைய ஜன்ம நக்ஷத்திரம் எந்த எந்த கிழமைகளில் வந்தால் எவ்வித பலனைக் கொடுக்கும் என்று கூறும்பொழுது "அத்வா போஜன மாலஸ்யம் வித்யா வஸ்த்ரம் வராங்கனா । ம்ருத்யுச்ச ஜாயதே நிருணாம் । ஞாயிறு முதலிய கிழமைகளில் ஜன்மநக்ஷத்திரம் வந்தால் முறையே வழிநடை, நல்லுணவு, சோம்பல், கல்வி, ஆடை, பெண், மரணம் உண்டாகும் என்று

சொல்லுவது புதன் வித்யாகாரகன் என்பதை வலுப்படுத்து கிறது.

ஸ்காந்தம் கஸிதர்மோத்தர பாகத்தில் புதவார விரதம் கூறப்படுகிறது. மார்கழிமாதம் முதல் புதவாரத்தில் இந்த விரதத்தை உத்யாபனம் செய்தல் வேண்டும். இறுதியில் பாலால் தர்ப்பணம் செய்யவேண்டும் என்றும் கூறுகிறது. கலிகாலத்தில் அந்தணர்கள் பிழைக்க வழியில்லாமல்போனதால் காசியில் கங்கைக்கரையில் ப்ராயோபவேசனம் செய்தனர் (வடக்கு நுனியாக தர்ப்பத்தைப் பரப்பி உணவின்றி மரிக்கும் வரையில் அதில் படுத்திருப்பது ப்ராயோபவேசனம்) விச்வ நாதன் இரவில் சேவகன் ரூபத்தில் வந்து அவர்களை அங்கு தங்கக்கூடாது என விரட்டினார். அந்தணர் உறுதியுடன், ஈச பக்தியில் ஈடுபட்டு தங்களுடைய நிலையை விளக்கிக் கூறினர். விசுவநாதன் பிரத்யக்ஷமாகி புதவார விரதத்தை அனுஷ்டிக்கும் படி சொல்லி, விரதம் செய்யவேண்டிய முறை முதலியவற்றை யும் கூறினார் என்று புதவார விரதக் கதை விரதசூடாமணியில் காணப்படுகிறது. பாபியுடன் கூடிய புதனும், 1, 6, 8, 10 இடங் களில் இருக்கும் புதனும் துன்பத்தை உண்டுபண்ணுவான். அத் துன்ப நீக்கம் கருதி இந்த விரதம் செய்யவேண்டும் என்றும் கூறப்படுகிறது.

கர்ப்பிணியான பெண்ணை பிரஸவத்திற்கு புதன்கிழமை அழைத்து வரலாகாது என்ற ஒன்றைத் தவிர மற்ற எல்லாக் காரியங்களையும் புதவாரத்தில் செய்யலாம் என்று கூறுகின்றனர். பிரஸவத்திற்கு கர்ப்பிணியை புதன்கிழமை அழைத்துவரலா காது என்று அந்தணர் வீட்டு அம்மாமிகள் கூறுகின்றனர்.

சாம்பலடிவிழா (ash wednesday) என்ற ஒரு விழா கிருஸ்தவர் கொண்டாடுகின்றனர். கிருஸ்துவின் மரணதினம் நல்ல வெள்ளிக்கிழமை (good friday) அவர் உயிர்பெற்று எழுந்தது ஞாயிற்றுக்கிழமை. கிருஸ்துவர்கள் தாங்கள் செய்த பாபங் களுக்குக் கழுவாயாகத் தவம்செய்ய நாற்பது நாட்களை அந்த ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பு ஏற்படுத்திக்கொண்டனர் இந்தப் பழக்கம் மோசேயின் காலத்திலிருந்தே இருந்துவந்தது. கிருஸ்து உயிர்பெற்ற ஞாயிற்றுக்கிழமைக்கு முந்திய நாற்பதா வது நாளாகிய புதன்கிழமை தபமியற்றுவதற்கு அடையாள மாக உடல்முழுதும் சாம்பலைப் பூசிக்கொள்வர். முதலில் பெருங் குற்றவாளிகள் மட்டும் பூசிக்கொண்டனர். இப்பொழுதோ எல்லா கிருஸ்தவருமே நெற்றியில் மட்டும் அடையாளமாகப்

பூசிக்கொள்ளுகின்றனர் இவ்வாறு கிருஸ்துவருக்கும் புதன் கிழமை ஒரு சிறப்பு நாளாக ஆயிற்று. (பிறகு கிருஸ்தவ மதத்தில் ஏற்பட்ட பல மாறுதல்களால் தவத்திற்கு உரிய நாட்கள் குறைந்தன. சாம்பலடி விழாவும் கிழமை மாறிவிட்டது.)

அதர்வவேதம் இருபதாவது காண்டம் 137 வது சூக்தம் இரண்டாவது மந்திரம் "மனிதர்களே நமக்கு இன்ப மளிப்பவனே இந்திரன் இன்பமயமாகுங்கள். அறிஞர்களே செல்வத்தைப் பற்றித் தூண்டுங்கள். இந்திரனை சோமபானம் செய்வதில் நமக்குத் துணைபுரிய துரிதமாய் அழைத்துவாருங்கள்" என்று பொருளுடையது புதனை தேவதையாகக் கொண்டது.

திருவெண்காட்டை புதக்ஷேத்திரமாகச் சொல்லுகிறார்கள். அங்கு தனியாக புதமூர்த்தி உள்ளது. சந்திரன் தாரையினிடம் தனக்குப் பிறந்த மகனை புதனை சண்டையிட்டு வியாழனிடமிருந்து பெற்றுவந்தான். தனக்கு புதனுடைய பிறப்பால் விளைந்த மகாபாதகத்திற்கு வருந்தி ஈசனை பிரார்த்தித்தான். அசரீரியான வாக்கைக் கேட்டு திருவெண்காட்டில் புதனை வைத்து அங்கு நீராடிப் பாபத்தினின்றும் விடுதலைபெற்றான். என்று திருவெண்காட்டுத் தலபுராணம் கூறும்.

இவனுக்கு ஸ்காந்தத்திலுள்ள அஷ்டோத்திர சதநாம ஸ்தோத்திரத்தால் வியாபாரத்தில் கெட்டிக்காரன் (வாணிஜ்ய நிபுணாய) வாதநோயைத் தீர்ப்பவன் (வாதரோகஹ்ருதே) தர்க்க சாஸ்திரத்தில் நிபுணன் (தர்க்கசாஸ்திர விசாரதாய) என்பன புலப்படுகின்றன.

ஆத்ரேயாய வித்மஹே ஸோமபுத்ராய தீமஹி | தன்னோ
புத: ப்ரசோதயாத்
சந்த்ர புத்ராய வித்மஹே கணிதக்ஞாய தீமஹி | தன்னஸ்
ஸோம: ப்ரசோதயாத் என்று இரண்டுவித காயத்ரீ

யுள்ளது. புதனுடைய உற்பத்தி எல்லா புராணங்களிலும் ஒரேவிதமாகவே உள்ளது. பொன் அகப்பட்டாலும் புதன் அகப்படாது என்று கூறுவர் அது உண்மைதான். புதனைப் பற்றி விஷயம் ஒன்றும் அதிகமாகக் கிடைக்கவில்லையே.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.

திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

( மலர் 27, இதழ் 12, பக்கம் 578 இன் தொடர்ச்சி )

## சரியை

மாணாக்கன் : அவ்வாறாயின், 'சரியை' என்பது யாது ?

ஆசிரியர் : 'இறைவன் ஆண்டான்' என்பதும், 'உயிர்கள் அவனுக்கு அடிமை' என்பதும் முன்னே பல இடங்களிலும் சொல்லப்பட்டன. இந்த ஆண்டான் அடிமை நிலை எக்காலத்திலும் (பெத்தம், முத்தி என்னும் இருநிலையினும்) உள்ளதே. அதனால், உயிர்கள் இறைவனை உணர்ந்து அவனுக்குப் பணி செய்து மகிழ நினைக்கும் காலமே, அவைகட்கு உய்தி கூடும் காலமாகும். ஆகவே, சரியை முதலிய நான்குமே இறைவனுக்கு உயிர்கள் செய்யும் பணிகள் தாம்.

'பணிகள்' என்றவுடன், உலகில் உள்ள தலைவர்களது பணியோடு ஒருங்கொத்ததாக நினைத்து, 'அவை இறைவனுக்குப் பயன்படுதற்பொருட்டுச் செய்யப்படுவனபோலும்' என்று மயங்குதல் கூடாது. ஏனெனில், இறைவன் உலகத் தலைவர்கள்போல ஒன்றுதல் பலவாதல் குறையுடையன் ஆகாது, வரம்பில் இன்பம் உடையனாய், வேண்டுதல் வேண்டாமை அற்று இருப்பவனாதலின், அவனுக்குப் பணியாளர் சிலர் நின்று பணிபுரிந்து குறை நிரப்பவேண்டிய நிலை சிறிதும் இல்லை. மற்று, அவனும் உலகத் தலைவர்கள்போலச் சில பணிகளை வைத்து, அவைகளை உயிர்கள் புரியுமாறு வலியுறுத்துதல், அவ்வுயிர்களின் நலம் கருதியேயன்றித் தன் நலம் கருதியன்று.

செங்கோல் அரசன் ஒருவன் நாட்டில் பலவகைப் பணித் துறைகளை அமைத்து, ஏற்ற பெற்றியால் அவைகளை இயற்றுவித்துப் பலரையும் செவ்வனே பணிபுரியுமாறு வலியுறுத்துதல், குடிமக்களின் நன்மை கருதியேயன்றித் தன் நலம் கருதியன்று

என்பது வெளிப்படை. அவ்வாறே இறைவன் வலியுறுத்தும் பணியையும் உணர்ந்துகொள்க எனினும், அரசன் குறை யுடையன்; ஆகவே, அவன் தன் நலத்திற்காகவும் சிலரைப் பணிசெய்யக் கொள்வான். அதனால் அரசனது பணியாகிய எடுத்துக்காட்டினைத் தன்னலங் கருதாது இயற்றுவிக்கும் அளவிற்கொள்க.

உயிர்கள் இயல்பாகவே ஆணவமலத்தால் மறைக்கப்பட்டுத் தம் அறிவை இழந்து கிடத்தலின், அவ் வாணவமலம் பரிபாக மான நிலையில் முதற்கண்ணே அவை இறைவனது நுண்ணி லையை அறியும் வன்மையுடையன ஆகமாட்டா. அதனால், முதற்கண் அவனைப் பருநிலையில் பொதுவாக உணர்ந்து, பின்பு நுண்ணிலையில் சிறப்பாக உணரும். பருநிலையில் பொதுவாக உணருங்கால் செய்யும் பணிகளே சரியை முதலிய மூன்றும். ஞானம் இறைவனை நுண்ணிலையில் உண்மையாக உணர்ந்து நிற்கும் பணியாகும்.

முதற்கண்ணே தனது நுண்ணிலையை உணரமாட்டாத உயிர்கள், தன்னைப் பருநிலையாக உணர்தற் பொருட்டே, இறைவன் வடிவம் அற்ற தனது உண்மைநிலையினின்றும் இறங்கி, வடிவம் உடையவனுய்ப் பொதுநிலையில் நிற்கின்றான். 'அவ்வடிவம் 'உருவம், அருவுருவம், அருவம்' என்ற மூன்று வகை யினை உடையது' என்பது பதியியலுள் இனிது விளக்கிக் கூறப் பட்டது. இறைவனது வடிவம், 'திருமேனி' என்று போற்றப் படும். மூவகைத் திருமேனிகளுள் உருவத் திருமேனிகளைத் தீண்டி வழிபடுதலும், திருமேனிகளின் வழிபாட்டிற்கு ஆவன வற்றை அகல நின்று செய்தலும் 'சரியை' எனப்படும். உமா மகேசர், சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், நடராசர் முதலிய வடிவங்களே யன்றி ஆசான் மூர்த்தியும் அடியார்களுங்கூட இறைவனது உருவத் திருமேனிகளே. இத்திருமேனிகள் அனைத்தும் 'மாகேசுர மூர்த்தம்' எனப்படுதலால், மாகேசுர பூசை அனைத்தும் சரியைத் தொண்டுகளேயாம்.

இனித் திருக்கோயிலில் சென்று இலிங்க மூர்த்தி முதலிய அனைத்து மூர்த்திகளையும் அகலநின்று வழிபடுதலும், அங்கு நிகழும் வழிபாட்டிற்கு ஆகுமாறு, நந்தவனம் வைத்தல், பூக் கொய்துகொடுத்தல், பூத்தொடுத்துக்கொடுத்தல், திருக்கோயில் திருவலகிடுதல், திருமெழுக்கிடுதல், உழவாரப் பணி செய்தல், பழங்கோயில்களை வேண்டும் அளவிற் புதுக்குதல், நித்திய நைமித்திக வழிபாடுகளைச் செய்வித்தல், அவற்றிற்கு வேண்டப் படும் குடம் கலசம் தூப தீபக்கால்கள் முதலியன ஆக்கித் தருதல்,

சிவபுராணங்களையும் அடியவரது வரலாறுகளையும் கேட்டல், தீர்த்த யாத்திரை தல யாத்திரைகள் செய்தல் முதலாக இன்னோரன்ன பலவும் சரியைத் தொண்டுகளாம் என்க.

இவை அனைத்தையும் சுருங்கக் கூறின், 'புறத்தொழில் அளவில் இறைவனது உருவத் திருமேனியை நோக்கிச் செய்யப்படுவன பலவும் சரியை' என்று கூறலாம். திருக்கோயிலில் இலிங்க மூர்த்தியாகிய அருவுருவத் திருமேனியையும் இந்நிலையில் வழிபடுதல் உண்டாயினும், ஏனை உருவத்திருமேனிகளோடு இதனையும் ஒன்றாக வைத்துப் புறத்தொழிலளவில் வழிபடுதலல்லது, அதன்கண் சிறப்பாகச் செய்யவேண்டிய வழிபாடுகளை அகம் புறங்களால் செய்யாமையால் அவ்வழிபாடும் சரியை வழிபாடேயாம்.

## கிரியை

மாணுக்கன் : இவை அனைத்தும் சரியையேயாயின், 'கிரியை' என்பது யாது ?

ஆசிரியர் : 'கிரியை' என்பது சிவபிரானது அருவுருவத் திருமேனியாகிய இலிங்க மூர்த்தத்தை அணுகியிருந்து, அதன் கண் அப்பெருமானை, 'மந்திரம், கிரியை, பாவனை' என்ற மூன்றினுலும் அகத்திலும், புறத்திலும் பலவகை உபசாரங்களையும் முறைப்படி செய்து வழிபடுதல். திருமுழுக்கு (அபிடேகம்), ஆடை அணிகலம் சந்தனம் புட்பம் முதலியவற்ருல் செய்யும் ஒப்பனை (அலங்காரம்) படையல் (நிவேதனம்), புகை, ஒளி (தூபம், தீபம்), குடை, கொடி, கண்ணுடி, கவரி முதலிய மங்கலப் பொருள்கள் இவைகளை ஏற்பித்து, வலம் (பிரதட்சிணம்), அடிபணிதல் (நமஸ்காரம்), புகழ்ச்சி (தோத்திரம்) என்பவற்றைச்செய்து, வேண்டி (பிரார்த்தித்து) நிற்றல் என்னும் இவ்வகை அணுக்கத் தொண்டே கிரியையாகும். சரியை நிலையிலும் திருமுழுக்கு முதலியவற்றைச் செய்யினும் அவை மேற்சொல்லியமந்திரம் முதலிய மூன்ருனும் அகத்தும், புறத்தும் நிகழாது, செயலளவில் புறத்து மட்டுமே நிகழ்தலின், அவை 'கிரியை' எனப்படுதல் இல்லை.

திருக்கோயில்களில் இறைவன் கொண்டு விளங்கும் இலிங்கத் திருமேனிகள், ஊரும், நாடும் ஆகிய உலகு அனைத்தின் பொருட்டுமாகும். ஆதலின், அவ்விலிங்கங்களில் பிறர் பொருட்டாக (பரார்த்தமாக) ச் செய்யப்படும் வழிபாடு இபற்றப்படும். ஆகவே அவரவரும் தம் பொருட்டாக (ஆன்மார்த்தமாக) ச்

செய்யவேண்டிய வழிபாட்டினை ஆசிரியர் வழியே இலிங்கத் திருமேனியைப் பெற்று, அவர்பால் அதனை வழிபடும் முறையை நன்குணர்ந்துகொண்டு, அதன்படியே செய்தல் வேண்டும்.

## யோகம்

மாணக்கன் : 'சரியை, கிரியை' என்பவற்றிற்கு மேல், 'யோகம்' என்பது எவ்வாறு செய்யப்படும் ?

ஆசிரியர் : 'யோகம்' என்னும் வடசொல்லிற்குப் பொருள். 'கூடுதல் அல்லது ஒன்றுதல்' என்பதே. ஆன்மா இறைவனேடு ஒன்றுதல் அறிவாலல்லது. உடலால் அன்று. ஆயினும், மனம் முதலிய அந்தக் கரணங்கள், கண் கை கால் முதலிய புறக் கரணங்கள்போல ஆன்மாவிற்குப் பெரிதும் தூரமாகாது, அதனேடு ஒற்றித்து நிற்றலின், அவற்ருல் இறைவனைக் கூடுதலும் 'யோகம்' என்று உபசரித்துக் கூறப்படும், புறத்தே பரந்து சென்று உலகப் பொருள்களோடு ஒன்றியே பழகிவிட்ட இம்மனம் முதலிய அந்தக்கரணங்களை அவற்றின்மேற் செல்லாத வாறு அடக்கி அகத்தே நிறுத்தி இறைவனேடு ஒன்றச் செய்தல் என்பது எளிதான செயலன்று. அதனல். அவ்வாறு செய்தற்கு முதற்கண் பல செயல்கள் வேண்டப்படுகின்றன. ஆகவே. 'யோகம்' என்பது எட்டுக் கூறுகளாகப் பகுத்துச் சொல்லப் படுகின்றது. அவ் எட்டுறுப்புக்களாவன : 'இயமம், நியமம், ஆசனம், பிராணயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம். சமாதி' என்பன.

இவற்றுள் 'இயமம்' என்பது, நூல்களில், 'நன்மக்கட்கு ஆகா' என விலக்கப்பட்ட தீயொழுக்கங்களை அறவே விலக்கு தல். இந்நிலையில் நிற்பார்க்கு மனைவியோடு இருத்தலும் குற்றமாம். "மடவாரோடும் பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றி" என்று நாவுக்கரசர் அருளிச்செய்தது, இந்நிலையில் நிற்பிக்க நினைந்தேயாம். மனைவியோடும், மக்களோடும் இருந்த வர்களாகக் கூறப்படும் முனிவர்கள், 'வானப்பிரத்தம்' என்னும் மூன்ரும் நிலையில் நின்றவர்களேயன்றி, முற்றத் துறந்த 'சந்நியாசம்' என்னும் நான்காம் நிலையில் நின்றவரல்லர். ஆகவே அவரெல்லாம் 'யோகியர்' எனப் பெயர் பெருர். 'தவத்தவர்' எனப் பெயர் பெறுவர்.

கிரியையிலும் சிறுபான்மை யோக உறுப்பு உண்டு; அங்ஙனமே வானப் பிரத்தரும் சிறிது யோகப்பயிற்சி யுடைய ராய் இருப்பர். எனினும் அவரெல்லாம் தாரணை, தியானம். சமாதி என்பன கைவரப்பெற்று, இறைவனேடு ஒன்றி நிற்கும்

அனுபவம் எய்தப்பெறுராகலின், 'யோகியர்' எனப்படார். இயமம் முதலிய சிலவற்றில் ஓரளவில் நிற்கும் 'தவத்தவர்' எனவேபடுவர். எனவே, நாவுக்கரசர் அருளியவாறு முற்றத் துறந்த முனிவரே யோகத்திற்கு உரியவராவர் என்க.

'நியமம்' என்பது நூல்களில் விதித்தனவற்றை இயன்ற அளவிற்செய்தல். "நீர்பலகால் மூழ்கல்" முதலியன இந் நியமத்துட் சேர்வனவாம்.

இனி, 'ஆசனம்' என்பது, தாமரை (பத்மம்), யாமை (கூர்மம்) முதலிய பெயர்களைப் பெற்றுள்ள நிலையில் உடலைப் பயிற்றி இருத்தல். 'பிராணயாமம்' என்பது இயற்கையாக இயங் கும் மூச்சுக் காற்றினைத் தம் வசப்படுத்தி ஒழுநெறியில் இயங்கச் செய்தல். 'பிரத்தியாகாரம்' என்பது தான் நினைந்த பொருளின் வடிவாதல்.

'தாரணை' என்பது மனத்தை அடக்கி ஒருவழியில் நிறுத்து தல். 'தியானம்' என்பது இறைவனை அவனது அருவுருவத் திருமேனியாகிய ஒளிவடிவினனாக எண்ணுதல். 'சமாதி' என்பது அந்த எண்ணத்தில் தம்மை மறந்து அவனோடே ஒன்றிவிடுதல். மனம் தாரணைக்கண் நின்றபின்னர்ச் சிவபெருமானைத் தியானித் தலும், அவனிடத்து அழுந்துதலுமே சிவயோகமாம். சரியை முறையிலும், கிரியை முறையிலும் சிவபெருமானுக்குச் செய்யும் பணியே ஞானத்திற்கு ஏதுவான இறப்பில் தவமாதல்போல, சிவபெருமானைத் தியானித்து, அவனிடத்து அழுந்தும் சிவ யோகமே ஞானத்திற்கு ஏதுவான இறப்பில் தவமாம். மனம் ஒன்றுதல் மாத்திரையால் 'கருமயோகம்' என்றும், 'பக்தியோகம்' என்றும் சொல்லப்படும் வருணாச்சிரம தருமங்களும், பிற தெய்வங்களிடத்துச் செய்யும் அன்பும்போல்வனவெல்லாம் மேலே கூறியவாறு பொதுத் தவங்களேயன்றி, ஞானத்திற்கு ஏதுவாய உண்மைத் தவங்கள் ஆகா என்பதனை மீட்டும் இங்கு நினைவு கூர்ந்து, கடைப்பிடித்து உணர்ந்துகொள்க.

சரியை, கிரியை, யோகம் என்பவற்றை மேற்கொண்டு ஒழுகும் முறைகள் பலவும் சிவாகமங்களில், 'சரியா பாதம், கிரியா பாதம், யோக பாதம்' என்னும் பகுதிகளிலும், அவை பற்றி யெழுந்த பிற நூல்களிலும் வகுத்துக் கூறப்பட்டுள்ளன. யோகம், யோக நூலிலும் கூறப்பட்டது. ஆதலின், அவற்றை அவ்விடங்களிற் கண்டுணர்தல் வேண்டும். இங்குச் சரியை முதலியன இவை இவை எனச் சுட்டும் அளவிலே கூறப்பட்டன என உணர்க. (தொடரும்)

# புதுமைக்கு

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

**திரு. சொ. சிங்காரவேலன்** M. A., Dip. Ling.

(மலர் 27, இதழ் 12, பக்கம் 582 இன் தொடர்ச்சி)

அன்புள்ள புதுமை.

இவ்வாரம் வெளிவந்த ஒரு திங்களிதழில் கவிதை என்ற தலைப்பில் ஒரு உரை நடைத் துணுக்கு வெளியாகியிருந்தது. அதை எழுதியவர் ஒரு கவிஞர் என்றும், அவர் இதுபோன்று எண்ணற்ற புதுக் கவிதை (Modern Poetry) களைப் படைத்து வருபவர் என்றும், தமிழ்த் தாய்க்கு அவர் படைத்து வரும் அழியாத தெய்வப் படைப்புக்களை வரலாறு பொன்னெழுத்தில் பொறித்து மறவாது போற்றிவரும் என்றும் அவ்விதழாசிரியர் பாராட்டுக் குறிப்புக்கள் எழுதி அக் 'கவிதை' யினை வெளியிட்டிருந்தார். அந்தக் 'கவிதை' யென்று கருதப்பட்ட உரை நடைத் துணுக்கு (Piece of Prose) வேண்டுமானால் 'உரை நடைக் கவிதை' (Prose Poetry என்று அழைக்கப்படலாமே தவிர, கவிதை என்ற பெயரில் கருதப்படத்தக்கதன்று.

கவிதை என்பது என்ன? கவிதைக்கு எஃது உயிர் எனக் கருதத் தக்கது? கவிதையைப் பயிலல் எவ்வாறு? கவிதையின் திறனய்ந்து தெளிதல் எங்ஙனம்? உயர்ந்து நிற்கும் கவிதை எவ்வாறு உலகில் நிலைக்கின்றது? எஞ்ஞான்றும் 'இறவாத புதுக் கவிதை' படைத்திடல் எங்ஙனம் இயலும்? என்பன போன்ற வினக்கட்கு விளக்கம் எழுதி எழுதிச் சலித்துப்போன திறனய்வு உலகில் மீண்டும் அவற்றை நினைவுபடுத்தித் துன்பப் படுத்துவது இப்போது என் நோக்கம் அன்று; உண்மை ததும்பும் அழகிய கவிதைகள் - உண்மைக் கவிதைகள் – 'இழுமென் ஓசை' (Rythm) யும் 'விழுமிய பொரு'ளும் (Sublime thought) வாய்ந்த அழியாப் பாடற் செல்வங்கள் மீண்டும் தமிழகத்தில் தழைத்திடல் வேண்டும் என்பதே என் விருப்பம். அவ்விருப்பம், செயற்படுவது உன்காலக் கவிஞர்கள்-கவிஞர்கள் என்று தம்மைத்தாமே சொல்லிக் கொள்பவர்கள் - நான்கைந்து துணுக்குகளைப் பக்கங்களில் நிரப்பிவிட்டு அதனை அச்சிடுவித்து

ஒன்றுக்கு இரண்டாக விலையிட்டுச் செல்வாக்குள்ள மனிதர்களை விட்டு வெளியிட்டு விழா நிகழ்த்தித் தம் செலவிலேயே பொன்னாடையும் போர்த்துக்கொண்டு புகைப் படத்துக்கு மலர் மாலையுடனும் மலர்ந்த முகத்துடனும் காட்சிதரும் ஆயத்தக் கவிஞர்கள் ( Meady - made Poets ) கைகளில் இருக்கின்றது என்பதை நெஞ்சுவலித்திட நினைவூட்டுவதற்கே இதனை எழுதலானேன்.

வரம்பில்லாதது எதுவும் பயன் தராது. வரம்பற்ற வாழ்வும் அப்படியே. வரையறைப்படாத எதுவும் வாழ்விழக்கும். ஒரு கூட்டத்தில் சென்று ஒருவன் பேசி மகிழ்விக்க வேண்டுமாயின், நிரம்பிய நூலறிவு வேண்டும் என்று பழந்தமிழ்ச் சான்றோர் கருதினர். நிரம்பிய நூலறிவு இல்லாதார் அறிவுடையார் கூடிய அவையின்கண் சென்று ஓரிருசொற்கூடக் கூறவியலாது இடர்ப்படுவர். இதற்கு ஓர் உவமை கூறலாம். வட்டாடுதல் என்பது ஒருவகை விளையாட்டு. ஓர் அரங்கு இன்றி வட்டாடல் இயலாது. அரங்கின்றி வட்டாடல் எப்படி இயலாதோ, அப்படித்தான் நிரம்பிய நூலறிவின்றி அறிவாளர் கூடிய பேரவையின்கண் ஒருவன் புக்கு உரையாற்ற முந்துவதும் என்பது தெய்வப் புலவர் கருத்து.

" அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். "

கவிதைக்கும் இவ்வாறு சில வரம்புகளை முன்னோர் வகுத்தனர். அவ்வரம்பிற்குள் நின்றே கவிதை யாத்தல் வழக்கு. ஆயின் அவ்விலக்கணங்களனைத்தும் முற்றக் கற்றுணர்ந்த பின்னரே அவர்கள் பாடினர் என்பதன்று; செவி கருவியாக சிந்தை யடிநிலையாக அவர்கள் பாடிய அருங்கவிதைகளில் இலக்கணம் தானே வந்து பொருந்திநின்று பொலிவு பெறும்; பொற்புக் காட்டும். அழகிய வடிவம் ( Form ) பெற்ற அக்கவிதைகள் உயர்நோக்கடைவுடன் ( Content ) விளங்கிப் பொற்கிண்ணத்தின்கண் பொருந்திய பாலமுதமாகச் சுவை கூட்டும்; உண்போர் உள்ளங்களைப் பண்படுத்தி உயர்ந்த நெறியில் அவற்றைச் செலுத்தும்.

உன்காலத்தே பல கவிஞர்களுக்கு இந்த இலக்கண வரம்பு பிடிக்கவில்லையாம்; இயற்கையாகப் பொங்கி வழியும் கவிதைகளை இலக்கணச் சிறைக்குள் அடக்குவது இயற்கைக்கு மாறுபட்டதாம்; தோன்றுகிற வண்ணமெல்லாம் பாடவேண்டுமாம்; அவ்வாறு வரம்புகள் தளர்த்தப்பட்டு 'சித்தம் போக்கு சிவன்

போக்கு' எனுமாறு மனம்போனபடியெல்லாம் கவிதை வெளிவரவேண்டுமாம். இவ்வாறு கருதுகிறார்கள்; கூட்டங்களிலும் பேசிவருகிறார்கள்: இத்தகைய 'புதிய மனம்' படைத்த 'புண்ணியவான்கள்' தமக்கெனச் சில திங்களிதழ் வார இதழ்களையும் அமைத்துக்கொண்டு இந்நெறியைப் பேணிவருகின்றார்கள் எனவும் அறிகின்றேன்.

இவர்களைக் கேட்டால் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? 'மேலைநாட்டினை நோக்கித்தான் நாங்கள் தமிழ் மொழியை இவ்வாறு காக்கத் தொடங்கியுள்ளோம். அமெரிக்காவில் இத்தகைய கவிதைகளே பாராட்டப்பெறுகின்றன. இலக்கணத்திற்குப் பெரிதும் வேறுபட்ட இத்தகு புதுக் கவிதைகளை நாங்கள் படைப்பதன் வாயிலாகத் தமிழைப் பண்டிதர்களின் பயங்கரப் பிடியிலிருந்து - புலவர்களின் கொடிய இலக்கண வலையிலிருந்து 'விடுதலை' செய்து நாங்கள் புதுப் பணியாற்றுகின்றோம்' என்பது இவர்கள் தரும் விளக்கம்.

தம்பி, புதுமை! தமிழைச் சரியாகப் படிக்காத இத் திருக்கூட்டம் என்ன செய்கிறது? 'புதுமையே புதுமை' என்ற குரலெழுப்பி ஏதோ தம்மால்தான் தமிழ் காக்கப் பெறுவது போலவும், தாம் காவாவிட்டால் தமிழ் வாழ்விழந்து விடும் என்பது போலவும் வீண் கனவுகண்டு செருக்குகின்றார்கள். எத்தனையோ எதிர்ப்புக்களுக்கும், மொழிக் கலப்புக்கட்கும் ஈடு கொடுத்து இன்பம் கொழித்து வலிவும் மெலிவும் வாய்ந்த செந்தமிழ் வாழ்விழந்து விடும் என்று எண்ணுவதே மடமையன்றோ? அன்றியும் இவர்கள் செய்யும் செயல்களால் தமிழின் பழைய தூய வரம்புகள் சிதைந்து தமிழ் பாழ்பட்டுப் போகுமே தவிர, வளம் கொழிப்பது என்பது முயற்கொம்பேயாம்.

"பல்வகைத் தாதுவின் உயிர்க்குடல் போற்பல
சொல்லாற் பொருட்கிட னாக உணர்வினின்
வல்லோர் அணிபெறச் செய்வன செய்யுள்"

இது பவணந்தியார் காலப் பாட்டியல். பாட்டெழுதுவோர்க்கு அறிவு அடிநிலையன்று. 'உணர்வு' (Emotion) ஒன்றே அவர்கள்பால் அப்போது தலைதூக்கிநிற்கும் என்பது அறியத்தக்கது. சொற்கள் கருவியாக இவ்வுணர்வினின் பல்லோர் வெளியிடும் வெளியீடு கவிதையாகும்; அதனுள் பொருள் தங்கி இன்பூட்டும்; உடலில் உயிர்நின்று உடலை இயக்குவதுபோன்று 'செம்பொருள்' கவிதையினை நிலைபெறுவிக்கும். இந்த விளக்கம்

நன்கு சிந்திக்கத்தக்கது. உடலுக்குள் உயிர் உண்மை மூச்சுக் காற்ருல் வெளிப்படுமாறு போலப் பாட்டுள் நிற்கும் பொருள் இனிய ஒலி நயத்துடன் தவருது இயங்கவேண்டும் என்பது உட்கிடை உயிரோட்டம் ஓர் ஒழுங்கில் நடைபெறல்போன்றே ஒலிநயம் உரிய நடையில் அமைதல் வேண்டும்.

உன்காலக் கவிஞர்களின் கவிதைகளில் இவ்வியல் தெளிகின்றதா, நோக்கிக்காண். தம்மைக் கவிஞர் என்றும், இளம் பாரதி என்றும் இளங்கம்பன் என்றும். இளமபரணன் என்றும், இன்னிசை மணி என்றும். கவியரசு என்றும். கவிஞர் ஏறு என்றும், கவிஞர் திலகம் என்றும் தருக்குதலில் காணப்படும் வேகம் இவர்கள் எழுதும் கவிதைகளில் காணுமே; என்ன மாட்சி! இதுவா கவிஞர் இயல்பு! கற்றுணர்ந்தடங்கிய தெளிவும் அத் தெளிவால் விளைந்த செம்மாப்பும் அன்ரே கவிஞர் இயல்புகள்!

கவிதை ஓசையை அடியாக்கொண்டு இயங்குவது: ஓசை தட்டுப்படுவதே தளை தட்டுப்படுவதாகும்; சொல்லின் சிதைவே சீர் கெடுவதாகும்; அழகுற அமைக்கப் பெருத அலங்கோல வடிவே எதுகை கெடுவதாகும்: எழுத்துக்களின் எழில் - நிரல் மாறுபடுவதே மோனை கெடுவதாகும். ஆதலின் சீரும் தளையும் எதுகையும் மோனையும் முதலிய அனைத்தும் பாட்டில் வலிந்து வருவன வல்ல; இயல்பாக எழுந்து நின்று இன்பூட்டுவன. இவை கெடுவது - கெடுமாறு புனைவது பழந்தமிழ்க்குச் செய்யும் பெருந்தீமையாகும்

கவிதை பணத்திற்காக எழுவது அன்று: பாராட்டிற்காக முளைப்பதும் அன்று. அஃது உள்ளத்தின் பசியை – உணர்வின் விழிப்பை உருவாக்கும் உயர்ந்த திருப்பணி. அத் திருப்பணியை எல்லோரும் செய்திடல் முடியாது. எனவே இயலாதவர்கள் இங்கே ஒதுங்கி நிற்க வேண்டியவர்களே தாமும் கவிஞர் எனப் பாராட்டப்பெறவேண்டும் என்ற வீண் ஆசையால் இயலாத ஒன்றை முயன்று இடர்ப்படுவதுடன், கற்ற மக்களுக்கும் பேரிடர் விளைத்தல் வேண்டத்தக்கதொன்றன்று.

உயர்ந்த கவிதைகள் அளவாக வெளிவந்தாற் போதும். மட்டமான - மக்களைக் கீழ் நோக்கிச் செலுத்தும் தரமற்ற ஆரவாரக் கவிதைகள் புற்றீசல் போலப் பெருக வேண்டா. அவற்ருல் தமிழின் தூய்மை நலம் தொலைந்திடும்; எதிர்காலத்தில் எழிலுற விளங்கவேண்டிய இன்பத்தமிழ் பாழ்பட்டுப்போம். ஆதலின் 'வசன கவிதை என்ற பெயரால் எதை வேண்டுமாஞலும் எழுதித்தொலையட்டும்; கவலையில்லை. கவிதை என்ற

ஒப்பற்ற மாணிக்கத்தை உருநலம் சிதைத்து, ஒளிநலம் குலைத்து, கெடுத்திடல்வேண்டா என்பதே என் கருத்து. புதுக் கவிதை படைக்க நினைக்கும் அறிவாளர்க்கெல்லாம் நான் விடுக்கும் பணிவான செய்தி இதுவேயாகும்.

கவிதையின் சீரிய வரம்பு பற்றிய என் சிந்தனைத் துளிகளையே இம் முடங்கலிற் காட்டினேன். இதனைக் கூர்ந்துபடி ; பின் சிந்தனை செய். இதுபற்றிய உன் தெளிவான முடிவை அதன்பின் எனக்குத் தெரிவித்திடு. அது தெரிந்தபிறகுதான், 'கவிதையின் உள்ளீடு' பற்றி எழுத நினைக்கின்றேன் ; அப்போது கவிதை பற்றிய என் கருத்துக்களின் முழுமையினை நீ நன்கு உணர முடியும்

அன்புள்ள,

பழமை.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswamy Devasthanam. Sirkazhi.

I am really fortunate to have visited this very huge and neatly kept temple and to have got the blessings of the deities I must say I had very few occasions to visit such well maintained temples.

(Sd.) V. Srinivasan,
District Magistrate,
Cuddalore. 16—11—68

I am very happy to see that Sirkali temple is very well managed and the premises are kept spotlessly clean. Shri R. Sourirajan Superintendent of the temple took me round and I and my family could have comfortable dharsan of the Deity.

(Sd.) P. K. S. Raja.
10—11—68
Divisional Engineer, Telephones,
Madras.

# சிவாகம ஸார ஸர்வஸ்வம்

சிவாகம வித்துவான்,
சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார்

(மலர் 27, இதழ் 12, பக்கம் 595 இன் தொடர்ச்சி)

லோகாந்தர கதிக்கு ஹேதுவான சரீரம் புர்யஷ்டகம் எனப்படும். மற்றும் முன்கூறப்பட்ட கேவலம், சகலம் சுத்தம் என மூன்று அவஸ்தைகளும் தனித்தனி சாக்கிரம், சொப்னம், சுழுப்த்தி, துரியம் துரியாதீதம் என ஐந்து வகையாகப் பதினைந்து பேதப்படும். இவைகளை விரிவாக சித்தாந்த சாத்திரங்கள் மூலம் அறியலாம்.

ஆகவே மோக்ஷத்திற்குச் சாதனமாகவுள்ளது ஞானம், பிரபத்தி, வைராக்யம் என மூன்று. இவற்றில் ஞானமாவது:- தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆன்மரூபம், ஆன்மதரிசனம், ஆன்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் ஆகிய இந்த தச காரியங்களையும் குரு கடாக்ஷத்தினாலே அறிந்து அநந்யமாயிருக்கிற சிவபோகமே மோக்ஷம் ஆம். மற்றும்

சிவம் எங்கும் வியாபகமாய் இருக்கிறதையும் அவனிடத்திலே எல்லாம் இருக்கிறதையும் அவன் அருள்வழித்தன்றி ஒன்றுயினும் அறியமுடியாது என்பதையும் அறிந்து அவன் ஏவலின்படி செய்கிறோம் என்று எல்லாப் போகத்தையும் சிவார்ப்பணம் பண்ணி நமக்குப் புண்ணிய பாபம் என்று ஒன்றில்லை எனத் தன்னைப் பின்னிட்டுச் சிவனை முன்னிட்டுக் கொண்டு அவனதினனுகி சிவாகமங்களின் உண்மையறிந்து சிவமந்திரங்களான ப்ராசாதம் பஞ்சாக்ஷரம் முதலியவைகளை உச்சரித்துக்கொண்டு வாசனுக்ஷயம் செய்து சிவோஹம் பாவனையுடன் கூடியிருத்தல் சிவாநுபவத்திற்குத் தகுதியுள்ளவராய் சிவாநுபவத்தைப் பெறுவர்.

मुक्त्यै प्राप्य सतः तेषां भजेद्वेषं शिवालयम् ।
— சிவஞானபோதம்.

முத்தியை அடைவதற்கு சிவன்முத்தர்களான ஆசாரியனுடைய திருவேடத்தையும் சிவாலயத்தையும் வழிபடுக.

குரு லிங்க சங்கமத்தை வழிபடுக. இவ்வாறு ஞானபாதம் கூறப்பட்டது.

கிரியாபாதம் :

தந்திரகலை,

तनोति विपुलानर्थान् तत्त्व मंत्रसमाश्रितान् ।
त्राणंच कुरुते यस्मा त्तंत्रमित्यभिधीयते ॥

தத்வங்களுடன் மந்திரங்களையும் அடிப்படையாகக் கொண்ட விஸ்தாரமான பொருள்களைக் கூறுவதாலும் (அதனால்) காப்பாற்றுதலைச் செய்வதாலும் தந்திரம் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

मंत्रंविना क्रियानास्ति कर्षणाद्यर्चनान्तकम् ।

— காரணாகமம்.

மந்திரமின்றி கிரியை கிடையாது ஆகலாலும் மந்திரத்துடன் கூடி தத்துவங்களையும் கூறுதலாலும் தந்திரம் எனப் பெயர் பெற்றது.

कालं भूमिपरीक्ष्यादौ कर्षणं तदनन्तरम् ।
द्वितीयं यंत्रविन्यासं तदन्ते वास्तु पूजनम् ॥
पञ्चमं गृहनिर्माणं देवतास्थापनं ततः ।

— காரணாகமம்.

நல்ல வேளையில் பூமியை பரீக்ஷித்து அத்தகைய பூமியில் உழுது பதபாகம் செய்து வாஸ்துபூஜை செய்து ஆலயம் அமைத்துப் பிறகு தேவதா ஸ்தாபனம் செய்யவேண்டும்.

பூமியை சோதனம் செய்யும்போது அங்கு எலும்பு கரி முதலியது இல்லாததாகச்செம்மைப்படுத்திஉழுதும் மணல்வருமளவு அல்லது ஜலம் வருமளவு கொத்தி வாங்கி சல்யசோதனம்

வாஸ்துபூஜை வாஸ்து பலி முதலியன செய்து, சங்கு ஸ்தாபனம் செய்து திக்கு நிர்ணயம் செய்துகொண்டு, கோவாசம் முதலிய வைகளால் தூய்மை படுத்திப் பிறகு ஆலயம் நிர்மாணம் செய்ய வேண்டும்.

கிராமங்களில் தனித்தனியாக வைக்கப்படும் தேவதைகளின் ஆலயம் அமைக்கவேண்டியதாக இருந்தால் கிழக்கில் சூரியனுடைய ஆலயத்தையும், தென்கிழக்கில் ருத்ரன் ஆலயத்தையும், வடமேற்கில் ஷண்முகனின் ஆலயத்தையும், மேற்கில் விஷ்ணுவின் ஆலயத்தையும், வடமேற்கிலேயே துர்க்காலயத்தையும், தென்மேற்கில் அய்யனார் ஆலயத்தையும் வடக்கில் சப்தமாதரு கோவிலையும், ஈசானத்தில் சிவாலயத்தையும், குளக்கரையில் ஜ்யேஷ்டாலயத்தையும், கட்டவேண்டும். கிராமங்களில் புதியதாக இவ்வாலயங்கள் அமைக்கவேண்டியதாகவந்தால் இவ்வாறு அமைக்கவேண்டும்.

ஆலயங்கள், பிம்பங்கள், இலிங்கங்கள் செய்வதற்கு அளவு முக்கியம். அளவு கூடவும் இருத்தல் கூடாது; குறையவும் கூடாது.

मानहीने महाव्याधिः मानाधिक्ये महद्भयम् ।

அதாவது அளவு குறைந்தால் வியாதி உண்டாகும். அளவு அதிகமானுல் பயமுண்டாகும். ஆதலால் சரியான அளவுடன் யாவற்றையும் செய்யவேண்டும் என்று காரணாகமம் கூறுகிறது.

जालान्तर गतं रश्मेर्दृश्याद्दश्यंतु यद्रजः ।
परमाणुस्तदाख्यातः रेणु रोम कलीक्षुका ॥
यूकं यवक्रमेणैवं वृद्धिरष्टांगुले स्तथा ।
यवोदराष्ट विस्तार मङ्गुलंचेति कीर्तितम् ॥
अङ्गुलं द्वादशं तालं किष्कुहस्तं च तद्द्वयम् ।
प्राजापत्य करं प्रोक्तं पञ्चभिर्विंशदंगुलम् ॥
षड्विंशति धनुर्मुष्टिः स्तविंशद्धनुर्ग्रहम् ।

கூறையினின்றும் சிறு துவாரத்தின் வழியாக வெளிவரும் சூரியரச்மியில் கண்டும் காணுததுமாய் காணப்படும்

தூசியின் ஒன்று பரமாணுவெனப்படும். அந்த பரமாணுவின் எட்டு கொண்டது வாலாக்ரம் எனப்பெயர். அந்த வாலாக்ரத்தின் எட்டு கொண்டது ஒரு லிக்ஷை. எட்டு லிக்ஷை ஒரு யூகம், எட்டு யூகம் ஒரு யவம். எட்டு யவம் ஒரு மானுங்குலம். 24 அங்குலம் கொண்டது ஒரு கிஷ்கு இரண்டு முழம். இவ்வாறு 25 அங்குலமுள்ள அளவிற்கு ப்ராஜாபத்யம் என்றும், 26 அங்குலமுள்ள அளவிற்கு தனுர்முஷ்டி என்றும், 27 அங்குலமுள்ள அளவிற்கு தனுர்க்ரஹம் என்றும் பெயர்.

ப்ராசாதம், சபை, சாலை, மண்டபம், க்ருஹம் இவைகளை ப்ராஜாபத்யம் என்ற அளவினால் செய்யவேண்டும்.

ராஜதானி, அரண்மனை குளம் அகழ் முதலியவைகளை தனுர்முஷ்டி என்ற அளவினால் செய்யவேண்டும்.

ஆறு, சாலை அமைத்தல் முதலியவைகளை மானுங்குலத்தினால் அமைக்கவேண்டும். இதுபோல் மாத்ராங்குலம், தேஹல பித்தங்குலம் என்றும் அளவு உண்டு.

யஜமானனுடைய வலக்கை நடுவிரலின் நடுக்கணுவின் நீளம் மாத்ராங்குலமெனப்படும். இந்த மாத்ராங்குலத்தினால் யாகோபகரணம் முதலியவைகளைச் செய்யவேண்டும். பிம்பத்தின் உயரத்தை 124 கூறுகளாகச் செய்ய அவைகளின் 1 கூறு தேஹலப்த்தாங்குலமாகும்.

மற்றும் மானம், ப்ரமாணம், உன்மானம், பரிமாணம், உபமாநம், லம்பமானம் என்று அளவு ஆறுவிதமாகக் கூறப்படுகிறது.

மானம் :

ப்ரதிமையின் உயரம் - அகலம் இரண்டிற்கும் பொதுவாக மானம் என்று பெயர்.

பிரமாணம் :

விஷ்கம்பம், விசாலம் என்றும் கூறுவதுண்டு. இது பிம்பத்தின் அகலத்தைக் கூறும்.

( தொடரும் )

# அட்டாங்க யோகப் பேறு

சிவநெறிச்செல்வர்

திரு. K. M. வேங்கடராமையா M. A., M. O. L.,

" உள்ளுணர் வான ஞானம் முதலிய ஒருநான்குண்மை
தெள்ளுதீந் தமிழாற் கூறும் திருமூலர் "

" நந்தி திருவருள் பெற்ற நான்மறை யோகிகள் ஒருவர் "

" மற்றவர்தாம் அணிமாதி வரும்சித்தி பெற்றுடையார் "

என்று சேக்கிழார் சுவாமிகள் புகழப்பெற்ற திருமூலர் " தவராஜ யோகி "யாவர். இத் திருமூலர் தம் திருமந்திரத்தில், மூன்றும் பகுதியாகிய மூன்றும் தந்திரத்தில், அட்டாங்கயோகம் பற்றியும் அட்டமாசித்திகள் பற்றியும் சிறப்பாகக் கூறியுள்ளார். அவற்றுள் இங்கு எடுத்துக்கொண்ட பொருள் அட்டாங்க யோகப் பேறு என்பதாம்.

இறைவனை அடைவதற்குரிய மார்க்கங்கள் நான்கு. அவை சரியை கிரியை யோகம் ஞானம் என்பன. அவற்றுள் யோகம், சகமார்க்கம் எனப்பெறும். இச் சகமார்க்கம் முழுவதும் சாதித்தவர்கள் சாருபம் பெறுவர். இதனைச் சிவஞான சித்தியார் 3 ம் சூத்திரம் 22 ம் திருவிருத்தத்தால் அறியலாம் ;

" வினைகள், உகமார்க்க அட்டாங்க யோக முற்றும்
உழத்தல்;உழந் தவர்சிவன்தன் உருவத்தைப் பெறுவர். "

இதனுள் ' வினைகள் உக ' என்றமையால், சஞ்சிதமாகிய கன்மங்களெல்லாம் அட்டாங்க யோகத்தினுல் கெடும் என்றும் அறியவருகிறது.

அட்டாங்க யோகம் முழுவதும் பிரயாசைப் பட்டுச் சாதித்தாலும் சாருபம்தான் பெறலாம் ; பதமுத்திதான் கிடைக்கும். இதனைச் சிவஞான சித்தியார்,

" முன் மார்க்க ஞானத்தால் எய்துமுத்தி
முடிவென்பர் ; மூன்றினுக்கும் முத்தி பதமென்பர் "

என்று கூறும். இதில் மூன்று என்பது சரியை கிரியா யோகங்களை.

இனித் திருமூலர் 5 ம் தந்திரத்தில், "யோக விசேடமே அட்டாங்க யோகமாம்" என்று கூறுவதும் இங்கு அறிதல் தகும்

அட்டாங்க யோகத்தால் அட்டமாசித்திகள் கிடைத்திடும்.

இதனை அட்டமாசித்தி என்ற தலைப்பில் 30 ம் பாடலால் அறியலாம் :-

"எட்டாகிய சித்தி ஓரெட் டியோகத்தாற்
கிட்டாப் பிராணன் செய்தால் கிடைத்திடும்"

என்றமை காண்க.

'கிட்டாப் பிராணன் செய்தால்" என்பதற்கு, 'அடக்க முடியாத பிராண வாயுவை அடக்கி ஆண்டால்' என்பது பொருள்.

அடுத்த மந்திரத்தில்

"சித்திகள் எட்டன்றிச் சிரெட்டி யோகத்தால்
புத்திக ளானவை எல்லாம் புலப்படும்"

என்றமையால் பாசஞானமும் பசுஞானமும் புலப்படுதலோடு பதிஞானம் அடைய வழிகோலும் என்று அறிகின்றோம். இதனையே ஸ்ரீ குமரகுருபர சுவாமிகளும் 'மெய்ஞ்ஞானம் தரும் அட்ட யோகத் தவமே' என்று கந்தர் கலி வெண்பாவில் அருளுவாராயினர். 'நன்னெறி செல்வார்க்கு ஞானத்தில் ஏகலாம்' என்ற திருமந்திரமும், 'யோகம் - ஞானத்திற்கு வாயில்' என்று கூறிற்று. திருமூலர் 'அயமுறும் அட்டாங்க யோகமும் ஆமே' என்றதால் அட்டாங்க யோகம் பிறவாமையை யுண்டுபண்ணும் எனலாம். 'அயமுறும் - பிறவாமையை யுண்டுபண்ணும்' என்பது பொருள். 'பிறவாமை வேண்டும்' என்ற அம்மையார் வாக்கும் இங்குக் கருதுக.

இத்தகைய அட்டாங்க யோகம் முற்றும் கைவரப்பெற்ற வர்களாகப் பெரிய புராணத்தில் திருமூலரையும், பெருமிழலைக் குறும்பரையும் கொள்ளலாம். தொகையடியார்களில் சித்தத்தைச் சிவன்பால் வைத்தவரும் இவ்வகையைச் சேர்ந்தவரே யாவர். இத் தொகையடியார்களைச் சேக்கிழார் சுவாமிகள் "நாதாந்தத் தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார்" என்பர்

இனி அட்டாங்க யோக உறுப்புக்களைப் பின்வரும் வெண்பாவான் அறியலாம் :-

"இயம நியமம் இணங் காதனம் யாமம்
அயர்வில்பிரத் யாகார மாகும் — முயலுங்கால்
தாரணை யோடு தியானம் சமாதியுமென்
றோரிரு நான்குமே யோகு."

இது பற்றிய திருமூலர் திருமந்திரப் பாடல் பின்வருமாறு :-

"இயம நியமமே எண்ணிலா ஆதனம்
நயமுறு பிராணயா மம்பிரத்தி யாகாரம்
சயமிகு தாரணை தியானம் சமாதி
அய்முறும் அட்டாங்க மாவது மாமே. (செ. 550)

தொல்காப்பியம், பொருளதிகாரம், புறத்திணையியல் 20-ம் நூற்பாவில், ஈாலிருவழக்கில் தாபதப்பக்கம் என்ற துறைக்கு நச்சினார்க்கினியர், 'எண்வகை மார்க்கத்துத் தவம் புரியும் கூறு' என்று உரை வகுத்து, 'அந்நாலிரண்டும் தவம் புரிவார்க் குரியனவும், தவஞ்செய்து யோகஞ் செய்வார்க்கு உரியனவும் என இருவகைய' என்றும், யோகம் செய்வார்க்கு உரியன இயமம் நியமம் ஆசனம் வளிநிலை தொகைநிலை பொறைநிலை நினைதல் சமாதி என எட்டும் என்றும் கூறி, இவற்றை எட்டு உரைச் சூத்திரங்களான் உணர்த்தினர்.

இனி அட்டாங்க யோகப் பேறு என்ற பகுதி, எண்வகை யோக உறுப்புக்களுள் ஒன்றோ இரண்டோ பலவோ பயின்று நிற்பினும், பயின்ற அளவுக்குரிய பயன்களைக் கூறுவதாக வுள்ளது.

இயமத்துள் நின்றார் பெறும் பேற்றினை,

" போதுகந் தேறும் புரிசடை யானடி
யாதுகந் தாரம ராபதிக் கேசெல்வர்
ஓதுகந் தானிவன் என்றருள் செய்திடும்
மாதுகந் தாடிடு மால்விடை யோனே "

என்று திருமந்திரம் கூறும்.

'வேண்டத்தக்க தறிவோய் நீ, வேண்ட முழுதுந் தருவோய் நீ" என்ற வாசகமும், 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்ற தாண்டகமும், வேண்டத்தக்கதறிந்து ஈசன் தருகுவன் என்பதைப் பகரும்.

" பொய் கொலை களவே காமம் பொருளாசை
இவ்வகை யைந்தும் அடக்கியது"

ஆகிய இயமத்துள் நின்றவர் தேவருலகத்துக்குச் செல்வர் என்று மேலே குறித்த திருமந்திரம் புகல்கிறது.

" பெற்றதற் குவத்தல் பிழம்புநனி வெறுத்தல்
கற்பன கற்றல் கழிகடுந் தூய்மை
பூசனைப் பெரும்பயன் ஆசாற் களித்தலொடு
நயனுடை மரபின் நியமம் ஐந்தே "

இத்தகைய நியமத்துள் நின்றவர் சிவபதம் சேர்வர் என்று பின்வரும் திருமந்திரம் கூறும்:-

" பற்றில் பதத்தன்பு வைத்துப் பரன்புகழ்
கற்றிருந் தாங்கே கருது பவர்கட்கு
முற்றெழுந் தாங்கே முனிவர் எதிர்வரத்
தெற்றுஞ் சிவபதம் சேர்தலு மாமே."

இனி,

" நிற்றல் இருத்தல் கிடத்தல் நடத்தலென்
றெத்த நான்கின் ஒல்கா நிலைமையோ
டின்பம் பயக்கும் சமய முதலிய
அந்தமில் சிறப்பின் ஆசனம்"

பயின்றவர் இந்திரனாகி இன்ப வாழ்வு எய்துவர். இதனை,

" வருந்தித் தவஞ்செய்து வானவர் கோவாய்த்
திருந்தம ராபதிச் செல்வன் இவனெனத்
தரும்தண் முழவங் குழலும் இயம்ப
இருந்தின்பம் எய்துவர் ஈசன் அருளே "

என்ற திருமந்திரத்தால் அறியலாம்.

" உந்தியொடு புணர்ந்த இருவகை வளியும்
தந்த மியக்கம் தடுப்பது வளிநிலை "

என்பது பிராணாயாமத்தைப் பற்றிய நச்சினார்க்கினியர் உரைச் சூத்திரம்.

பிராணாயாமம் கைவரப் பெற்றவர் சமாதி கூடிச் சிவ ஞானப் பேறு அடைவர் என்று திருமூலர் கூறுவர்.

பிரத்தியாகாரம் எனினும் தொகைநிலை எனினும் ஒக்கும்.

" பொறியுணர் வெல்லாம் புலத்தின் வழாமல்
ஒருவழிப் படுப்பது தொகை நிலையாமே "

என்பது உரைச் சூத்திரம். பிரத்தியாகாரம் கைவரப் பெற்றவர் சிவலோகம் சென்று சிவபெருமானை நேரில் தரிசனம் செய்து கொள்வர் என்றும், இவர்களைத் திசைகாப்பாளர்கள் 'யார் இவன்' என்று கேட்பின், சிவபெருமானே 'நாம் இவன்' என்று அருளும் சிறப்பை இவர்கள் பெறுவார்கள் என்றும், தேவர்கள் இவர்களை எதிர்கொண்டழைப்பர் என்றும்,

" சேருறு காலந் திசைநின்ற தேவர்கள்,
'ஆர்இவன்' என்ன, அரன், 'நாம் இவன்' என்ன,
ஏருறு தேவர்கள் எல்லாம் எதிர்கொள்ளக்
காருறு கண்டனை மெய்கண்ட வாறே "

என்ற திருமந்திரத்தால் அறியலாம்.

தாரணை யாவது பொறைநிலை என்றும் கூறப்படும்.

" மனத்தினை ஒருவழி நிறுப்பது பொறைநிலை "

தாரணையாகிய பொறை நிலையால் நமன் வரும் வழி அடைக்கும. இந்நிலையினர் இமையவர் வாழ்கின்ற எட்டுத் திசைகளிலும் எங்கும் வாழ்வர். இதனைத் திருமூலர், 'சொல் வழியாளர் நல்வழிநாட நமன்வழி மாற்றிடும்' என்றார். இதில் சொல்வழியாளர் என்றது யோக நூல்களிற் சொல்லப்பட்ட நெறிகளைக் கடைப்பிடிப்பவர் என்பது பொருள். நல்வழி யாவது, நல்ல வழியாகிய தாரணை.

இனித் தியானமாவது, நினைவு என்றும் கூறப்படும்.

" நிறுத்திய அம்மனம் நிலைதிரி யாமல்
குறித்த பொருளொடு கொளுத்தல் நினைவே. "

இங்ஙனம் தியானிப்பவர், யாரைத் தியானிக்கிறார்களோ, அவ்வவர் இடங்களை அடைவர்.

சமாதி யாவது,

" ஆங்கனம் குறித்த ஆய்முதற் பொருளொடு
தான்பிற னுகாத் தகையது ; "

அதாவது சிவபரம் பொருளும் சீவனும் இரண்டற ஒன்றித் தற்போதமற்று இருக்கும் நிலை. இச் சமாதி கூடியோர் ஆணவ மலமறைப்பால் விளையும் உபாதிகள் நீங்கப்பெறுவர் ; முற்றறி வுடைமை, வரம்பிலாற்றலுடைமை, தன்வயத்தனுதல் முதலாய சிறந்த ஏழு உபாதிகளைப் பொருந்திப் பரம்பொருளைச் சேர்வர்.

இவ்வெண்வகை யோக உறுப்புக்களே 'செயற்கரிய' என்றும், இவற்றைச் சாதிப்பவரே 'பெரியர்' என்றும், 'திருவள்ளுவர்' "செயற்கரிய செய்வார் பெரியார்" என்ற குறட்பகுதியில் அறிவித்துள்ளார்.

இன்னணம் செயற்கரிய செய்து தமிழ் மூவாயிரம் தந்தருளிய திருமூலரைப் போற்றுவோமாக !

" சக்கர வர்த்தி தவராஜ யோகி யெனும்
மிக்கதிரு மூலனருள் மேவுநாள் எந்நாளோ "

—தாயுமானவர்.

# செய்திகள்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களின் திருச்செந்தூர் வழிபாடு

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆண்டுதோறும் கந்தசஷ்டி விழாவிற்குத் திருச்செந்தூர் எழுந்தருளி கந்த விரதம் மேற்கொண்டு செந்திலாண்டவனை வழிபட்டு வருதல்போல இவ்வாண்டிலும் திருச்செந்தூருக்கு எழுந்தருளினார்கள். கந்தசஷ்டி விழாநாட்களில் நாடோறும் திருக்கோயிலுக்கு எழுந்தருளி செந்திற்குமரனை அபிஷேக அர்ச்சனை ஆராதனைகள் செய்வித்துத் தரிசித்து இன்புற்றார்கள். கன்யாகுமரிக்கு எழுந்தருளி ஸ்ரீ கன்யாபகவதிக்கு புஷ்பாஞ்சலி செய்வித்து வழிபட்டார்கள். நெல்லை, சுசீந்திரம், சிவசைலம் முதலிய தருமையாதீனத்துக்குச் சொந்தமான திருமடங்கட்கு எழுந்தருளி திருமடத்துக்குரிய நிர்வாகங்களை மேற்பார்வையிட்டருளினார்கள். சிவசைலத்தில் ஸ்ரீ சிவசைலநாதருக்கும் ஸ்ரீ பரமகல்யாணியம்மைக்கு லக்ஷார்ச்சனைகள் செய்வித்து வழிபட்டார்கள்

25—12—68 திங்கள் காலை மதுரைக்கு எழுந்தருளி அங்கயற்கண்ணியையும் ஆலவாயரனையும் வழிபட்டுப் பிற்பகல் 2 மணியளவில் தருமைக்கு எழுந்தருளினார்கள்.

## தருமை துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின் திருக்கடவூர்ச் சோமவார வழிபாடு

25—11—68 திங்கட்கிழமை திருக்கடவூரில் கார்த்திகைச் சோமவார விழா. 1008 சங்காபிஷேக தரிசனம் மிகச் சிறப்புடையது இவ்விழாவிற்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களும் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களும் திருக்கடவூருக்கு எழுந்தருளினார்கள். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியவர்கள் துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கட்கு மலர்மாலை அணிவித்துப் பொன்னாடை

போர்த்திச் சிறப்பித்தார்கள். துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களும் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானம் அவர்களுக்கு மலர்மாலை சூட்டி பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி சங்காபிஷேக தரிசனம் செய்து ஸ்ரீ அமுதகடேசுவரரையும், ஸ்ரீ அபிராமி அம்மையையும், ஸ்ரீ காலசம்ஹார மூர்த்தியையும் வழிபட்டு இன்புற்றூர்கள்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் எழுந்தருளி வழிபட்ட திருக் காட்சி அன்பர்கட்குப் பெருவிருந்தாயமைந்திருந்தது.

## தருமை துறைசையாதீன ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின்
## வேளூர்த் திருக்கார்த்திகை வழிபாடு

வேளூரில் 3—12—68 செவ்வாய்க்கிழமை திருக்கார்த்திகை விழா. ஸ்ரீ செல்வமுத்துக்குமாரப் பெருமானுக்கு விசேஷ அபி ஷேக ஆராதனைகள் நடைபெற்றன. இவ்விழாவிற்குத் தருமை யாதீனம் துறைசையாதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் எழுந் தருளி வழிபாடாற்றிய நிகழ்ச்சி குறிப்பிடத்தக்க சிறப்புடைய தாகும். திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் வேளூர்க் கட்டளை மடத்திற்கு எழுந்தருளியதும் இரு மகாசந்நிதானங்களையும் கொலுவில் எழுந்தருளச்செய்து வித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர் களும், வித்துவான். ஸ்ரீமத். இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களும் தீபாராதனை செய்து வழிபாடு செய்தார்கள். அன் பர்கள் பலரும் தரிசித்துத் திருநீறு பெற்றுக்கொண்டார்கள். பின்னர் இருமகாசந்நிதானங்களும் திருக்கோயிலுக்கு எழுந் தருளி வழிபாடு செய்தருளினார்கள். ஸ்ரீ செல்வமுத்துக்குமார ருக்கு மிகச் சிறந்த முறையில் அபிஷேக ஆராதனை அர்ச்சனை கள் நடைபெற்றன. இருமகாசந்நிதானங்களும் ஸ்ரீ செல்வ முத்துக்குமாரருக்குப் பொன்னாடைகள் சார்த்தி வழிபட்டார்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானங்கள் கட்டளை மடத்திற்கு எழுந் தருளினார்கள்.

## தருமை துறைசையாதீன மகாசந்நிதானங்களின்
## சிதம்பரம் வழிபாடு

வேளூரிலிருந்து பிற்பகல் 6 மணி அளவில் இருமகா சந்நி தானங்களும் சிதம்பரத்திற்கு எழுந்தருளினார்கள். சிதம்பரத்

தில் தருமையாதீனத்துக்குச் சொந்தமான ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்திற்கு எழுந்தருளியானதும் அன்பர்கள் பலரும் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களை வரவேற்றார்கள். ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்கள் கொலு வீற்றிருந்து அருட்காட்சி வழங்கினர் கள். சைவப்பேரன்பர் டாக்டர் திரு. K. அரங்கசாமிப்பிள்ளை அவர்கள் இரு மகாசந்நிதானங்களையும் வழிபட்டு மலர்மாலைகள் அணிவித்துப் பொன்னாடை போர்த்தி வணங்கி அருளாசி பெற்றுக்கொண்டார். திரு. R. K. சிவகுமாரன், திரு. பொன்னம்பலப் பிள்ளை முதலியோர் வணங்கி அருளாசி பெற்றனர்.

பின்னர் இரு மகாசந்நிதானங்களும் ஸ்ரீ சபாநாதர் திருக் கோயிலுக்கு எழுந்தருளினார்கள். கீழைக் கோபுர வாயிலில் பொது தீக்ஷிதர்கள் பூர்ணகும்ப மரியாதைகளுடன் மலர்மாலைகள் அணிவித்து மகாசந்நிதானங்களை வரவேற்றுத் திருக் கோயிலுக்கு அழைத்துச் சென்றார்கள்.

திருக்கோயில் வழிபாடுகள் முறையே நடைபெற்றன. பொது தீக்ஷிதர்கள் சிற்சபையில் இரு மகாசந்நிதானங்களையும் வரவேற்றுப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தனர். ஸ்ரீ நடராசப் பெருமானுக்கு விசேஷ வழிபாடுகள் செய்விக்கப் பெற்றன. வழிபாடுகள் முடிந்ததும் பேரம்பலத்தில் இரு மகா சந்நிதானங்களையும் பொது தீக்ஷிதர்கள் பாராட்டிப் பேசினர். இவ்வாறு ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்கள் எழுந்தருளி சிதம்பர தரிசனம் செய்த அருட்காட்சியை அன்பர்கள் பலரும் கண்டு களித்து இன்புற்றார்கள்.

### சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலையத்தில்

## மகாகந்தசஷ்டி விழா

சென்னை, தருமபுர ஆதீன சமயப் பிரசார நிலையத்தில் மகா கந்தசஷ்டி விழா 22—10—68 முதல் 28—10—68 முடிய மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. நாள்தோறும் மாலையில் ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசுவாமிக்கு சகஸ்ரநாமார்ச்சனை வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. நிலைய அன்பர்களாகிய திரு. S. திருநாவுக்கரசு நாயனார், திரு. V. S. ஆறுமுகம் செட்டியார், திரு T. N. உடையநம்பி நாடார், திருமதி. N. தாக்ஷாயனியம்மாள்.

திரு. P. G. செங்கல்வராய செட்டியார், திரு. S சாம்பசிவஜயர், நல்லி, திரு. அரங்கசாமி செட்டியார் ஆகியோர் ஒவ்வொருநாள் வழிபாட்டையும் தங்களது உபயமாக ஏற்றுச் சிறப்புற நடத்தி வைத்தார்கள்.

22—10—68 முதல்நாள் விழாவிற்கு உயர்நீதிமன்ற நீதிபதி உயர்திரு. R. சதாசிவம் அவர்கள் தலைமை வகித்தார்கள். தொழிலதிபர், திரு. நா. மகாலிங்கம் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்து கந்தபுராணம் போன்ற கருத்து நிறைந்த செய்யுள் நடையில் உள்ள நூல்களை எளிய இனிய உரை நடையில் கிறித்தவர்கள் பைபிளை பல பாகுபாடு செய்து எளிய நடையில் வெளியிடுவதுபோல் நமது சமயத்தைச் சார்ந்த வசதியுடையவர்கள் வெளியிட முன்வரவேண்டும் என்று குறிப்பிட்டார்கள். தருமையாதீன சமயப் பிரசார நிலையம் செய்துவரும் பணியைப் பாராட்டினார்கள்.

பட்டிமன்றமணி, புலவர். திரு. கீரன் அவர்கள் செந்நெறி ஒழுகுவார்க்குச் செப்பிய புராணம். பூங்கயிலை வெற்பனும் புனைமலர்ப் பூங்கோதையும், போற்றினர்க்கு அருளவல்லான், சூரன் அமைச்சும் வீரன் அமைச்சும், தடுத்தது மானம் ஒன்றே, இலங்கையும் இளங்கையும், வள்ளி தெய்வயானை திருமணம் என்ற தலைப்புக்களில் ஏழு நாட்களும் இலக்கிய நயம் நிறைந்த இனிய சொற்பொழிவாற்றி எல்லோரையும் மகிழ்வித்தார்கள்.

திரு. K. E. அருணாசல முதலியார், திரு. P. திருஞான சம்பந்தம் பிள்ளை, திரு. M. S. சாரங்கபாணி முதலியார், திரு S. வடிவேல் பிள்ளை, டாக்டர். திரு இரத்தினவேல் சுப்பிரமணியம் ஆகியோர் ஒவ்வொருநாள் தலைமை வகித்துப் புலவர் கீரன் அவர்களின் சொல்லாற்றலையும் எடுத்துச் சொல்லும் முறைகளையும் பாராட்டி, நிலையம் சமயத்திற்காகச் செய்துவரும் தமிழ்ப்பணி, சமயப்பணி, பிரசாரப் பணிகள் காலத்திற்கும், நாட்டிற்கும் ஏற்ற பணியாகும் என்று குறிப்பிட்டார்கள். தவத்திரு. சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் உடனிருந்து சிறப்பாக நடத்திவைத்து நிறைவின்போது நன்றி தெரிவித்தார்கள்.

உ
குருபாதம்

சென்னை, தருமபுர ஆதீன மடாலய தேவாலய சமயப் பிரசார நிலைய வழிபாட்டுக் குழுவினர் அறுபதின்மர் ஒரு பஸ் மூலம் (24-12-68 செவ்வாய்முதல் 30-12-68 திங்கள் முடிய) சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலயாத்திரை செய்யும் விபரம்.

## 24—12—68 செவ்வாய்க்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 5-30 மணி | | நிலயத்தில் வழிபாடு |
| ,, 5-45 | ,, | வழியனுப்பு வாழ்த்துரை |
| ,, 6-00 | ,, | புறப்பாடு |
| ,, 10-30 | ,, | திருவாரூர் வழிபாடு |
| பகல் 12-30 | ,, | மாகேசுவரபூஜை |
| மாலை 6-30 | ,, | நாகப்பட்டினம் வழிபாடு |
| ,, 8-00 | ,, | ஷை ஸ்ரீசட்டையப்பர்கோயில் வழிபாடும் சமயப்பிரசாரமும். |

## 25—12—68 புதன்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 8-00 மணி | | மஞ்சட்கொல்லை வழிபாடு |
| ,, 9-30 | ,, | திருச்சிக்கல் வழிபாடு |
| ,, 11-00 | ,, | திருத்தேவூர் வழிபாடு |
| பகல் 12-30 | ,, | திருக்கீழ்வேளூர் வழிபாடு |
| ,, 1-30 | ,, | மாகேசுவரபூஜை |
| மாலை 4-30 | ,, | திருப்பள்ளியின் முக்கூடல் வழிபாடு |
| ,, 6-00 | ,, | திருவாரூர்ப் பரவையுண்மண்டளி வழிபாடு |
| ,, 7-00 | ,, | திருவாரூர் அரநெறி வழிபாடு |
| ,, 8-00 | ,, | திருவாரூர்ப் பூங்கோயில் வழிபாடும் சமயப்பிரசாரமும் |

## 26—12—68 வியாழக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 8-00 மணி | திருவிளமர் வழிபாடு | |
| ,, 9-30 ,, | திருக்கண்ணமங்கை வழிபாடு | |
| ,, 10-30 ,, | திருக்கரவீரம் வழிபாடு | |
| ,, 11-30 ,, | மணக்கால் வழிபாடு | |
| பகல் 12-30 ,, | இராப்பட்டீச்சரம் வழிபாடு | |
| ,, 1-30 ,, | மாகேசுவரபூஜை | |
| மாலை 4-30 ,, | திருத்தலையாலங்காடு வழிபாடு | |
| ,, 6-00 ,, | எண்கண் வழிபாடு | |
| ,, 7-30 ,, | திருப்பெருவேளூர் வழிபாடும் சமயப்பிரசாரமும் | |

## 27—12—68 வெள்ளிக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 8-30 மணி | திருக்கொள்ளம்பூதூர் வழிபாடு | |
| ,, 10-30 ,, | திரு இடைவாயில் வழிபாடு | |
| பகல் 12-00 ,, | திருக்குடவாயில் வழிபாடு | |
| ,, 1-00 ,, | மாகேசுவரபூஜை | |
| மாலை 4-30 ,, | திருநாலூர்மயானம் வழிபாடு | |
| ,, 5-30 ,, | திருச்சேறை வழிபாடு | |
| ,, 7-00 ,, | திரு இரும்பூளை (ஆலங்குடி) வழிபாடும் சமயப்பிரசாரமும். | |

## 28—12—68 சனிக்கிழமை

| | | |
|---|---|---|
| காலை 8-00 மணி | திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் வழிபாடு | |
| ,, 10-00 ,, | திருவெண்ணி (கோயில்வெண்ணி) வழிபாடு | |
| பகல் 12-00 ,, | திருப்பூவனூர் வழிபாடு | |
| ,, 1-00 ,, | மாகேசுவரபூஜை | |
| மாலை 4-30 ,, | திருஅரதைப்பெரும்பாழி வழிபாடு | |
| ,, 6-00 ,, | திருஅவளிவணல்லூர் வழிபாடும், சமயப்பிரசாரமும். | |

## 29—12—68 ஞாயிற்றுக்கிழமை

| | | | |
|---|---|---|---|
| காலை | 8-00 | மணி | பரிதி நியமம் வழிபாடு |
| ,, | 10-30 | ,, | திருப்பாதாளீச்சரம் (பாமணி) வழிபாடு |
| பகல் | 12-00 | ,, | திருக்கோட்டூர் வழிபாடு |
| ,, | 1-00 | ,, | மாகேசுவரபூஜை |
| மாலை | 4-00 | ,, | கோட்டூர் மணியம்பலம் வழிபாடு |
| ,, | 5-30 | ,, | திருக்களர் வழிபாடு |
| ,, | 7-00 | ,, | திருவெண்டுறை வழிபாடு |
| ,, | 8-30 | ,, | மன்னார்குடி இராஜகோபாலசுவாமி வழிபாடும், சமயப்பிரசாரமும். |

## 30—12 68 திங்கட்கிழமை

| | | | |
|---|---|---|---|
| காலை | 9-00 | மணி | திருஇந்தளூர் பரிமளரங்கநாதர் (வைகுண்ட ஏகாதசி) வழிபாடு |
| ,, | 10-00 | ,, | ஆனந்ததாண்டவபுரம் ஸ்ரீ நடராசர் வழிபாடு |
| ,, | 11-00 | ,, | வைத்தீசுவரன்கோயில் கிருத்திகை வழிபாடு |
| பகல் | 1-30 | ,, | மாகேசுவரபூஜை |
| ,, | 3-30 | ,, | சென்னை புறப்பாடு |
| இரவு | 11-00 | ,, | சென்னை சேர்தல் |
| ,, | 11-11 | ,, | கடவுள் வாழ்த்து |

# இலவச சித்த வைத்தியசாலை

## டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

## மஞ்சள்காமாலை

சமீபகாலத்தில் இந்த வியாதி சர்வசாதாரணமாக தீப்பொறிபோல் பரவி பல மக்களையும் பரிதவிக்கும்படி செய்துவிட்டது.

இதைத் தனி ரோகம் என்று சொல்வதைப் பார்க்கிலும், வேறு ஒரு ரோகம் காண்பதற்கு முன் அறிகுறி என்று கூறினால் அது மிகையாகாது.

**வியாதியின் குணம்:**

பொதுவாக காமாலையை சித்தவைத்தியத்தில் அறுவகையாகப் பிரிக்கிறார்கள். அதாவது தேகம் அசைந்து உடல் முழுவதும் புண்போல் வலித்து கண் வெளுத்து, நா உலர்ந்து, வயிறு பொருமிக் கழிந்து, நீர் மஞ்சள் நிறமாயிறங்கி, தாகம், மூர்ச்சை, அசதிகண்டால் காமாலை என்றும் தேகம் வறட்சியுற்று முகம்வாடி, விழிகள் வெளுத்து, தாது கெட்டு, பலங்குறைந்து நடக்கும்போது திகைப்பு, இளைப்பு, கைகால் ஓய்ச்சல் அசதி, நித்திரை இன்மை அன்னத்துவேஷம் கண்டால் வறட்டுக்காமாலை என்றும், தேகம் உலர்ந்து கறுத்து வலித்து, கண் வெளுத்து, மூலத்தில் அக்கினி மந்தம் அன்னத்துவேஷம் கை கால் ஓச்சல், பலங்கெட்டு, அயர்ந்து புறங்கால் கடுத்து, மலம் கட்டி, வயிறு பொருமி ஆயாசம் களைப்புண்டானால் வாதகாமாலை என்றும், தேகம் வறண்டு, வெளுத்து, முகங்கனத்து, கை, கால் தீப்போல் எரிச்சல் உண்டாகி விழிநீர் மஞ்சள் நிறமாகி அன்னம் செல்லாமல் வயிறு பொருமிக்கழிந்து, வாந்தி இறுகிறுப்பு. அசதி கண்டால் பித்தக்காமாலை என்றும், தலை, முகம் யாவும் வியர்த்து, உடல் நடுங்கி, நாக்கு, கண்ணீர் வெளுத்து, ஒளி மங்கி, இருமல் விக்கல் எடுத்து நித்திரை கெட்டு, மேல்மூச்சு இளைப்பு கண்டால் சிலேத்ம காமாலை என்றும், அக்கினி மந்தித்து தேகத்தில் ரத்தம் கெட்டு தசைவெளுத்து

ஈரல் கருகி பசி கெட்டு. கண் மலம், நீர் யாவும் மஞ்சளாயிருந்தால் மஞ்சள் காமாலை என்றும் கூறப்படுகின்றன.

காரணங்கள் :-

இனி மஞ்சட்காமாலை வரும் காரணங்களைப்பற்றி ஆராய்வோம். (1) அதாவது பித்தநீர் குடலுக்கு வந்து விழுவது தடைப்பட்டுப் பித்தப்பையிலேயே பித்தநீர் சேர்ந்து, அது கிரகிக்கப்பட்டு, அது ரத்தத்தில் போய்க் கலந்துவிடும். (2) ஈரலின் தொழில் கெட்டுப் பித்தநீரை சுரப்பிக்காமல் போவதால் பித்தம் வெளிப்படாமல் ரத்தத்திலேயே தொங்கித்து நின்றுவிடுகின்றது. முதலில் சொன்ன காரணம்தான் முக்கியமானது ஆனால் பின் சொன்ன கருத்திற்கு பல ஆக்ஷேபனைகள் உண்டு. அதாவது பித்தப்பையில் கல்லுண்டாகிப் பித்தக்குழலில் வந்து அடைத்துக்கொண்டு பித்தம் குடலில் விழாமல் செய்வதே மஞ்சள்காமாலைக்கு முக்கிய காரணமாகும். மேலும் பித்தப்பையில் தேங்கி இருக்கிற பித்தநீர் இறுகிப் பித்தக்கல் உண்டாகின்றது. மூவாயிரம் கல்கள்வரை ஒரே பையில் இருந்ததாக ஆராய்ச்சியில் தெரியவருகிறது. நல்ல போஜனங்களைச் செய்து கொண்டு ஒரே இடத்திலேயே உட்கார்ந்துகொண்டு தொழிலைப் பார்க்கின்றவர்களுக்கு இந்தக் கல்கள் உண்டாகின்றன. இந்தக் கல் அல்லது கற்கள் சிறுகுடல் வளைவில் டியோடினத்தில் வந்து விழுந்த பிறகு மலத்துடன் வெளிப்பட்டுவிடும் தேக நிறமும் மாறிவிடும். பித்தக் குடல் சுருங்கிவிடுதல் மலபந்தத்தால் குடல் நிறைந்து பித்தக்குழலை அமுத்திக்கொள்ளுவதனாலும் பித்த பாண்டுவரக் காரணமாகிறது.

லக்ஷணங்கள் :

தோல், கண்கள், நகம், மூத்திரம் ஆகிய யாவும் மஞ்சள் நிறமாய் மாறிவிடும். துணியில்பட்ட மூத்திரக் கறை பசுமை நிறமாய் இருக்கும். மலம் வெளுத்துக் களிமண்போல் இருக்கும். ஒரு சிலருக்குத் தேகம் பூராவும் நமைச்சல் ஏற்படும். ஆயாசம், உறக்கம், மயக்கம், கோப குணம், வாய் கசப்பு, மெதுஉற்ற நாடி ஆகிய இவைகளும் ஏற்படும். கார்னியாவும் கண்ணுக்குள் இருக்கிற நீரும் மஞ்சள் நிறமாகிவிடுவது உண்டு. அப்போது காணும் எல்லா வஸ்துகளும மஞ்சளாகத் தோன்றும்

வியாதி நாள்பட்டுவிட்டால் மயக்கம், விகாரம் முதலியவை மூளையின் விகற்பத்தால் ஏற்படலாம். போஷாக்கு குறைவாலும் பலகீனமும், தேக மெலிவும் ஏற்படும். ரத்தபீனிசம் ஈரலில் இருந்து ரத்தம் வடிதல் ஆகிய குறிகளும் காண்பது உண்டு. பித்தக் கல் அடைப்பு இருந்தால் சிலருக்கு அதிக வேதனையை உண்டுபண்ணும். வலி விட்டு விட்டு வரும். விக்கல் வாந்தியும் ஏற்படலாம். கல் பித்தகுழலை விட்டு வெளியாகாமல் இருந்தால் நோயாளி பிழைப்பது அரிதாகி விடும்.

**சிகிச்சை :**

இந்த வியாதி வரும் காரணத்தை நன்கு அறிந்து சிகிச்சை செய்யவேண்டியது வைத்தியரின் முதலான கடமையாகும். பித்தநீர் வருகிற வழி அடைபட்டு நின்று விட்டால் அப்பக்கத்திற்கு போஸ்த்துகாய் போட்டு காய்ச்சின வெந்நீர் ஒத்தடம் கொடுத்து உட்பு பேதிக்கு கொடுத்து உப்பில்லா பத்தியம் வைப்பது நல்லது கல் வெளிப்படும்போது நல்லது கொஞ்சமாக அபின் கொடுப்பது; இது பழைய காலத்து முறை. ஆனால் ஜாக்கிரதையாய்க் கையாள வேண்டும். லகு பேதிகள், வெந்நீர் ஸ்நானம், ஓய்வு, பத்திய போஜனம், இவைகளைக் கொண்டு வியாதியை ஓர் அளவு கட்டுப்படுத்தலாம்.

கீழாநெல்லி சகமூலம், மஞ்சள் கரிசலாங்கண்ணி சகமூலம், அம்மான் பச்சரிசி ஆகிய இம்மூன்றையும் சுத்தம்செய்து அரைத்து ஆட்டுப்பாலிலாவது, பசும்பாலிலாவது தினம் காலை மாலை இரண்டு வேளை சாப்பிடுவது நல்லது. மஞ்சள் காமாலையில் ஜுரம் கண்டால் பட்டுக்கறுப்பு கஸ்தூரிக்கறுப்புபோன்ற மருந்துகளை உள்ளுக்குக் கொடுத்து தாளிசபத்திரி, விஷ்ணு கிரந்தி, வேப்பிலை ஈர்க்கு, எலுமிச்சை ஈர்க்கு, இவைகளை ஒரு ரூபாய் எடை இடித்து ½ படி ஜலத்தில் கொதிக்கவைத்து ¼ பாகம் சுண்டியபின் காலை மாலை இருவேளையும் வேளைக்கு 2 அவுன்ஸ் வீதம் சாப்பிட்டு வந்தால் ஜுரம் குறையும். பொதுவாக அயம் காந்தம் மண்டூரம் ஆகிய செந்தூரங்களைத்தேனில் கொடுத்து வருவது சாலச் சிறந்தது.

காந்தம், அயப்பொடி, மிளகு, கரிசலாங்கண்ணி சகமூலம் வகைக்கு 1 பலம் வீதம் எடுத்து கரிசலாங்கண்ணிச்சாறு இட்டு ஒருநாள் பூராவும் அரைத்து கழற்சிக்காய் பிரமாணம்

உருண்டைசெய்து காலை மாலை இருவேளை இஞ்சிச் சாற்றில் கொடுத்து மோரும், அன்னமும் கொடுத்து வந்தால் மஞ்சள் காமாலை மற்றும் எல்லாக் காமாலைகளும் குணப்படும். பின் முக்கூட்டு எண்ணெய்ஸ்நானம் செய்ய நல்லது.

## வியாதியஸ்தர் குறிப்பு

தற்செயலாக ஒருநாள் என் வயலில் வேலை செய்யும் ஆட்களைக் கவனிக்கும்போது 100 கெஜ தூரத்திலுள்ள பொருள்களை என் இடது கண்ணுல் பார்க்க முடியவில்லை. 5-1-68 அன்று நான் தஞ்சாவூர்போய்க் கண் வைத்தியரிடம் காண்பித்த போது இது ஒரு வியாதி என்று சொல்லி ஒரு மாதம் வைத்தியம் செய்தார். ஆனால் பார்வை குறைந்துகொண்டே வந்ததே தவிர, பார்வையில் அபிவிருத்தி அடையவில்லை.

பிறகு 13-3-68ல் கும்பகோணம் சென்று அங்கு ஒரு பிரபல கண் வைத்தியரிடம் காண்பித்தேன். அவரும் ஒரு மாதம் வைத்தியம் செய்தார். அங்கும் எந்தப் பயனும் ஏற்படவில்லை. 12-5-68ல் பாண்டிச்சேரியில் உள்ள கோரிமேடு ஆஸ்பத்திரியில் காட்டினேன். அங்குத் தங்கி 14-6-68 முதல் 4-7-68 வரை வைத்தியம் செய்துகொண்டேன். அவர்கள் இந்த நோய் (Eales Disease with Vitreous Haemarrhage Both Eyes) என்று பெயர் வைத்தார்கள். படிப்படியாக என் பார்வை குறைந்து சுமார் 4 அங்குல தூரத்திலுள்ள பெரிய பொருள்களை மட்டும்தான் பார்க்கமுடிந்தது. அங்குள்ள தலைமை டாக்டர் என்மேல் பரிவுடன் எங்களால் செய்ய முடிந்தது இவ்வளவுதான். இதற்குமேல் இங்கு இதற்கு வைத்தியம் கிடையாது. ஆனால் ஒருக்கால் உத்தரபிரதேசத்திலுள்ள, சித்தாப்பூர் நேரு இன்ஸ்டிடூட் ரிசர்ச் ஆஸ்பத்தரிக்குச் சென்றால் குணமாகலாம். அங்கும் முடியாது என்றால் அமெரிக்கா, ரஷியா போன்ற மேல் நாடுகளுக்குச் சென்றால் குணமாகலாம் என்று சொல்லி டிச்சார்ஜ் செய்துவிட்டார்கள். அதன்பின் ஊருக்குவந்து சேர்ந்தபோது என் இருகண்களுமே சுத்தமாகத் தெரியவில்லை.

7-8-68 முதல் சித்த வைத்தியத்தில் ஏதாவது செய்ய முடியுமா என்று கேட்டுப்பார்க்கலாம் என்று வைத்தீஸ்வரன் கோயில் சித்த வைத்தியசாலை டாக்டர், திரு. இராமகிருஷ்ணன்

அவர்களிடம் காட்டினேன். அவர் இதை என்றால் குணப் படுத்த முடியும் என்று கூறி ஒரு மாதம் மருந்தும், ஒரு பச்சிலை தைலமும் கண்ணுக்கு விட்டுவந்ததில் என் பார்வை மீண்டும் கொஞ்சம் கொஞ்சமாக அபிவிருத்தி அடைந்து முன்போல் என் கண்களுக்குப் பார்வை வந்து விட்டது. சித்த வைத்தியத் தின் பெருமையை இப்பொழுதுதான் உணர்கிறேன். என்னைப் போல் மற்றவர்களும் "கண் கெட்டபிறகு சூரிய நமஸ்காரம் செய்யவேண்டாம்' எனக் கூறிக்கொள்ளுகிறேன்.

(Sd ) T. R. சேல்வராஜ்,

Ex Prisedent,
Edakkudi Vadapathi Panchajat,
Vaithiswarankoil.

12-9-68.

EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Sattanathaswami Devasthanam, Sirkazhi

We had the good fortune to visit this temple this morning after the Sashtiabdapoorthi ceremony of my wife at Tirukadayur yesterday. After some years I have came here and a feeling of thankfulness to Sambandar come over me as he had saved Saivism for Tamil Nad. I am thankful to the authorities for having shown great courtesy and kindness to the party. I wish them and the temple greater success in the years to come.

(Sd ) P. T. Rajan,
26—10—68.

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( கீலகஹு மார்கழிமீ 1உ முதல் 30உ முடிய )
( 15—12—68 முதல் 13—1—69 முடிய )

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் மிச்ர பலனைத்தரும். அசுவதி நான்கு பாதங்களும் கார்த்திகை முதல் பாதமும் வரவு செலவு சமனாகும். அதிக உழைப்பையும் சதா அலைச்சலையும் கவலைகளையும் தரும். பரணி நான்கு பாதங்கள் தொழில் ஏற்றத்தையும், இல்லற சுகத்தையும் கிரய விக்ரய லாபங்களையும் கீர்த்தியையும் உண்டுபண்ணும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½**

விருஷபராசி 9 பாதங்களும் மாதம் 15ம் தேதி முடிய அநேகவிதமான சிரம பலன்களையும் கவலைகளையும் கொடுத்து மிச்ரமான பலனைத்தந்து பின்பாதியில் தொழில் விருத்தி, இடம் மாறுதல், மேலோர் பெரியோர் அன்பு இவைகளையும் தரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி 9 பாதங்களும் சுபமேயாகும். திருவாத்திரையும், அநேகவிதமான தெய்விக காரியங்களும் நடைபெறும். வித்தியாவிருத்தியாகும். கஷ்டமான தொழில் கிடைக்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுப பலன்களைத்தரும். வித்தியா விருத்தியும், ஜீவன விருத்தியும் ஏற்படும். விசேஷ

லாபகரத்தோடு கிரய விக்ரயங்கள் ஏற்படும். கிரகசுகம் ஓங்கும். தெய்வபலம் காக்கும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்மராசி 9 பாதங்களும் பூர்ணமாகச் சுபத்தைத்தரும். வரவு செலவு சமனாகும். தொழில் ஓங்கும். சதா தெய்வ சிந்தனையும் தெய்வ காரியங்களும் நடைபெறும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 6. கன்னி - உத்திரம் ¾, ஹஸ்தம், சித்திரை ½

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிரமான பலனைத்தரும். சதா சஞ்சாரம் ஏற்படும். சத்ருக்கள் சரண் அடைவார்கள். தனதானய விருத்தி ஏற்படும். நூதனமாக ஸ்தாவர ஜெங்கம சொத்துக்கள் சேரும். மத்திய காலங்களில் வைத்திய செலவும் ஏற்படும். தெய்வபலம் முன்னின்று காக்கும். புதன், வியாழன் சுபமாகும்.

## 7. துலாம் - சித்திரை ½, சுவாதி - விசாகம் ¾

துலாராசி 9 பாதங்களும் பூர்ணமாக சுபத்தைத்தரும். தேவகோபம் நீங்கும். ஆரோக்யம் உண்டுபண்ணும். அசாத்தியமெல்லாம் சுலபசாத்தியமாகும். எதிர்பாராத முறையில் லாபங்களைத்தரும். குடும்பம் ஓங்கும். தெய்வபலம் பிரகாசிக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 8. விருச்சிகம் - விசாகம் - ¼, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் சுபமேயாகும். வம்சவிருத்தி ஏற்படும். தூர தேசத்திலிருந்து அழைப்புப்பத்திரம் வரும். உலக பிரசித்தி ஏற்படும். ஆரோக்யம் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர்ராசி 9 பாதங்களும் அசுபமெல்லாம் நீங்கும். சுபத்தை உண்டுபண்ணும். கிரஹசுகம் ஓங்கும். புத்திராதிகளால் நன்மை உண்டாகும். நஷ்டமான பொருள் வந்து சேரும். தொழிலில் ஏற்றம் ஏற்படும். நூதனமான முறையில் ஜீவனவிருத்தியாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 10. மகரம். உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகரராசி 9 பாதங்களும் சுபத்தைத்தரும். மேல் பதவிகள் இடைக்கும் ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் சேரும் ஸ்திரீ மூலமான தன பிராப்தியும் புத்திராதிகளால் சௌக்கியமும் உண்டாகும். உலக பிரசித்தி ஏற்படும். ஆரோக்யம் உண்டாகும். இல்லறசுகம் உண்டாகும் வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 11. கும்பம்-அவிட்டம் ½. - சதயம் - பூரட்டாதி ¾.

கும்பராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபம் இருக்காது. வரவுக்கு மிஞ்சின செலவுகளும், ரோக பீடைகளும், குடும்பத் தொல்லைகளும் அதிகமாகும். தூரதேசத்திலிருந்து அழைப்பு பத்திரம் வரும். நூதனமாக கிரக லாபம் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்

## 12. மீனம் பூரட்டாதி ¼ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலன்களைத்தரும். வரவு செலவு சமனாகும். நூதனமான தொழில் முறையால் லாபம் ஏற்படச்செய்யும். மேலோர்களாலும், பொது ஜனங்களாலும் உதவி ஏற்படும். மத்திய காலங்களில் குடும்ப மூலமாய்க் கொஞ்சம் கவலை ஏற்பட்டு நீங்கும் தொழில் மேன் மேலும் விருத்தியாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

குறிப்பு: மார்கழி மாதம் தனுர் ராசியில் சூரியன் முதல் தேதி ஞாயிற்றுக்கிழமை சித்திரை நக்ஷத்திரம் மூன்றும் பாதத்திலும் மாலை நாழிகை 24 52க்கு நான்காம் யாமத்திலும் தனுர் ராசியில் பிரவேசம் செய்கிறார். நான்காம் யாமபிரவேசத்தாலும்

கார்த்திகை மீ கடைசி முதல் மார்கழி மீ 8-வரை கிரகசஞ்சார பலத்தாலும் எதிர்காலத்தில் தெரிவிக்க கூடிய இயற்கை கோளாறுகள் எல்லாம் தக்ஷிண பாரத பூமியில் (தஞ்சை திருச்சி) ஜில்லாக்களில் தேவகோபம் தணிய நடந்துவரும யஞ்ஞயாகாதி தபோ பலத்தாலும், லக்ஷம் கோடி அர்ச்சனாதி பலன்களாலும் சகலவிதமான ஈதிபாதா ரூபமான பயங்களும் தெய்வசக்தியால் விலகி எங்கும் ஆஸ்திக விருத்தி ஏற்பட்டு பிரஜைகள் சந்தோஷகரமாகவும் அன்யோன்யம் பிரிதிஉள்ள வர்களாகவும் இருந்துகொண்டு தனதான்ய விருத்தியோடு சுபிக்ஷகரமாய் வாழ்க்கை நடத்திவர தெவீக சக்திகளும் ஸ்ரீமதாசாரிய சமயபீடாதிபதிகள் குருமார்களின் ஆசியும் முன் நின்று காத்து உலகம் பூராவுமே ஏகமனதாய் இருந்துகொண்டு தேசம் சுபிக்ஷம் அடைய எல்லா சக்திகளும் முன்னின்று காத்து அருள பிரார்த்திப்போமாக. தர்மமே ஜயம்

---

## விசேஷ நாட்கள்

### 10—1.—68 முதல் 10—1—69 முடிய

| | |
|---|---|
| 13—12—68 | மெய்ப்பொருள் நாயனர் திருநக்ஷத்தரம் |
| 14—12—68 | ஆனய நாயனர் திருநக்ஷத்திரம |
| 17—12—68 | பிரதோஷம |
| 20—12—68 | சாக்கிய நாயனர் திருநக்ஷத்திரம் |
| 25—12—68 | திருவெம்பாவை உத்ஸவ ஆரம்பம் |
| 27—12—68 | வாயிலார் நாயனர் திருநக்ஷத்திரம் |
| 31—12—68 | வேளூர் கிருத்திகை |
| 1— 1—69 | பிரதோஷம் |
| 3— 1—69 | ஆருத்திரா தரிசனம் |
| 3— 1—69 | சடைய நாயனர் திருநக்ஷத்திரம் |
| 6— 1—69 | ஸ்ரீலஸ்ரீ ஆனந்தபரவசர் குருபூசை |
| 9— 1—69 | இயற்பகை நாயனர் திருநக்ஷத்திரம் |

# அறிஞர் மறைவு

" விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின் "

என்ற குறளுக்கு இலக்கியமாக விளங்கியவர் நமது தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அண்ணுதுரை அவர்கள். இவரது ஆட்சிக்காலத்தில் தமிழ்நாடுபெற்ற நலங்கள் பல. இவர் இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, சென்னை நகரில் மிகச் சிறப்பாக உலகம் புகழும் வகையில் நிகழ்த்தியதை அனைவரும் அறிவர். பல்கலைக் கழகங்களில் திருக்குறளாராய்ச்சிக்கு நிலைநிதி நிறுவினுர். தமிழகத்திற்குத் தமிழ்நாடு என்ற பழம் பெயரே மீண்டும் வழங்கும்படிச் செய்தார். நம் தமிழ் நாட்டின் முன்னேற்றத்திற்கு அயராது உழைத்தார். மேலும் இவர் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் விளங்கினுர். பல நூல்கள் எழுதி வெளியிட்டுள்ளார். இவர் தம் உரை நடை பலரது உள்ளங்களையும் கவரும் வகையில் புதுப்பொலிவுடன் விளங்குவனவாகும். இவ்வாறு நாட்டுப் பணியும், மொழிப்பணியும் செய்த இவரை அமெரிக்க யேல் பல்கலைக் கழகம் அழைத்துச் சிறப்பித்தது. இப்பல்கலைக் கழகத்தின் சிறப்பைப்பெறும் முதல் இந்தியக் குடிமகன் இவரே என்பது குறிப்பிடத்தக்கது.

அண்ணுதுரை அவர்கள் உடல்நலம் இழந்து அமெரிக்கா சென்று அறுவைசிகிச்சை பெற்று நலமுடன் மீண்ட சில மாதங்களில் மீண்டும் நோயுற்ற செய்திகேட்டு எல்லோரும் வருந்தினர். சிறந்த மருத்துவர்கள் பலர்கூடி மனித முயற்சியால் செய்யத் தக்க சிகிச்சைகள் பலவும் அளித்தனர். 2—2—69 ஞாயிற்றுக் கிழமை பின்னிரவு அண்ணுதுரை அவர்களை இறைவன் இவ்வுலகத்திலிருந்து பிரித்து அழைத்துக் கொண்டான். அவரது பிரிவு அனைவரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது.

'எல்லா மக்களாலும் நேசிக்கப்பட்டவரும், சிறந்த தேச பக்தர்களில் ஒருவரும், நல்ல அறிஞரும், மேம்பட்ட நிர்வாகத் திறனுடையவருமான அண்ணாதுரை அவர்களின் மறைவு நமது நாட்டுக்கும் தமிழர்களுக்கும் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அன்னாருடைய ஆன்மா சாந்தியடைவதாக' என்ற அனுதாபச் செய்தியை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் முதலமைச்சர் அவர்கள் குடும்பத்திற்குத் தெரிவிக்கும்படி, மாண்புமிகு, அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கட்கு அனுப்பச்செய்தருளினார்கள்.

ஆதீனச் சார்பில் ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் மறைந்த முதலமைச்சர் மாண்புமிகு அண்ணாதுரை அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தி மலர் மாலை அணிவித்துத் தமிழக அமைச்சர்களிடம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்கள்

அண்ணாதுரை அவர்கள் ஆன்மா அமைதி பெறுக.

உ